# I. பொருளாதாரப் பிரச்சனைகளும் கொள்கைகளும்—1961

## முன்னுரை

1960ம் ஆண்டிற்குரிய இலங்கை மகாவங்கியின் வருடாந்த அறிக்கையில், நாணயத் துறையிலும் நிதித் துறையிலும் இலங்கையை எதிர்நோக்கி நின்ற இரண்டு முக்கியமான பிரச்சனைகள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஒரு புறத்தில், இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குநிதிகளில் தொடர்ச்சியாகவும் துரிதமாகவும் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தடுக்கும் நோக்கமாக நாட்டின் இறக்குமதிகள் உடனடியாகக் குறைக்கப்படவேண்டிய அவசியமும், மறுபுறத்தில், இலங்கையின் வெளிநாட்டுச் சென்மதி நிலுவை நிலைபரத்தில் சமமற்ற தன்மை ஏற்படுவதற்கு ஏதுவாய் இருந்த மேலதிகமான நாணய விரிவைக் குறைக்க வேண்டிய அவசியமும் இருந்தன.

இக்குறிக்கோளை அடைவதற்கான நேரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையால், 1961ம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதிகளின் அளவையும் பெறுமானத்தையும் குறிப்பிடத்தக்க அளவாற் குறைத்துக்கொள்ள முடிந்தது. இதன் விளைவாக இலங்கையின் வெளிநாட்டுச் சென்மதி நிலுவையில் உள்ள குறையையும், அதைத் தொடர்ந்து வெளிநாட்டு ஒதுக்கு நிதிகளில் ஏற்படும் வீழ்ச்சியையும், ஏற்றுமதி விலைவாசிகள் வீழ்ச்சியடைந்த பொழுதிலும்கூட குறைக்க முடிந்தது. இலங்கையின் சென்மதி நிலுவை தொடர்ந்தும் பாதகமானதாகக் காணப்பட்டதெனினும், 1961ம் ஆண்டிற்குரிய நிலைமை முந்தைய வருடத்திலும் பார்க்க எவ்வளவோ சீர்த்திருத்தத்தைக் காட்டிற்று.

உள்நாட்டில் ஏற்பட்ட நாணய விரிவைக் குறைப்பதற்காக இலங்கை எடுத்துக்கொண்ட முயற்சிகள் அவ்வளவு தூரம் வெற்றியீட்டவில்லை. அண்மையில் உள்ள கடந்த சில ஆண்டுகளில் அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் மொத்தக்குறை பிரமாண்டமான அளவுகளை அடைந்துள்ளது. அதுவே நாணய விரிவை உண்டாக்கும் பிரதான காரணமாக விளங்கியது. 1960-61ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசிறையை அதிகரிப்பதற்காகவும், வரவு செலவுத்திட்டக் குறையைக் குறைப்பதற்காகவும், பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் மொத்த அரசிறையை உயர்த்தின எனினும், அந்த உயர்ச்சியின் அளவு எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்கத் தாழ்ந்ததாக இருந்ததோடு, மொத்தச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பின் அளவை ஈடுசெய்வதற்குப் போதியதாகவும் அமையவில்லை. இதன் பயனாக, வரவு செலவுத் திட்டத்தின் மொத்தக்குறை, பணவீக்கத்தை உண்டுபண்ணத்தக்க நிதியீட்டங்கள், ஆகியவற்றின் பிரமாண்டமான அளவுகள், அண்மையில் உள்ள கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்டதிலும் பார்க்க அவ்வளவு வேறுபட்டதாகக் காணப்படவில்லை. ஏற்றுமதிப் பொருட்களின் விலை மட்டங்கள் மந்தமடைந்ததைத் தொடர்ந்து ஏற்றுமதித் தீர்வைகளினால் கிடைத்த வருமானம் குறைந்தமையினாலும், புதிய வரிகள் சம்பந்தமான சட்டங்கள் இயற்றப்பட்டதில் ஏற்பட்ட தாமதங்களினாலும், அந்நிய கடன்பாடுகளிலிருந்து கிடைத்த தொகைகள் குன்றியமையினாலும், மேலே கூறப்பட்ட விளைவுகள் ஏற்பட்டன.

இறக்குமதிகளின் வரத்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில், தொடர்ந்தும் நாணய விரிவு ஏற்படுவது இலங்கைக்கு புதிய பிரச்சனைகளைத் தந்துள்ளது. இதன் விளக்கம் யாதெனில், முக்கியமாக விலை மட்டங்களின்மேல் பலமான அமுக்கங்கள் தோன்றுவது தடுக்கப்படாவிடின் அது பொருளாதாரத்தின் மேல் பாரதூரமான பலாபலன்களைக் கொண்டு வரக்கூடும் என்பதேயாகும். இறக்குமதிப் பொருட்கள் கையிருப்புக்களிலிருந்து கிடைக்கக்கூடியனவாக இருந்தமை போன்ற காரணங்களால், இலங்கையில் உள்ள விலைமட்டங்கள், நாணய விரிவின் விளைவாக ஏற்படக் கூடிய பலாபலன்களால் தாக்குதல் அடையாமல் 1961ம் ஆண்டில் ஓரளவு பாதுகாக்கப்பட்டன. இந்நிலை வரையின்றி நெடுங்காலம் தொடர இயலாது; ஆதலின் நாணய விரிவை மட்டுப்படுத்துதலும், உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துதலும், அத்தியாவசியமானவை என்பதை அது வலியுறுத்தியுள்ளது.

1961ம் ஆண்டில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி உண்மை நியதியின் படி ஏறக்குறைய 4 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு விகிதம் முந்தைய வருடத்திற் காணப்பட்ட வளர்ச்சி விகிதத்திலும் பார்க்க குறைவானது ஆகும். பண நியதிப்படி மொத்தத் தேசிய உற்பத்தி முந்தைய வருடத்திற்குரிய அளவிலும் பார்க்க 2.4 சத வீதத்தால் மட்டும் அதிகரித்துள்ளது. 1961ம் ஆண்டிற்குரிய பணவருமான வளர்ச்சி தாழ்வான விகிதாச்சாரமாக இருந்தமை, பெரும்பாலும் ஏற்றுமதித் துறையிலுள்ள வருவாய்கள் குறைந்தமையினாலும் அதைத்தொடர்ந்து பொருளாதாரத்தின் சகல பகுதிகளிலும் தோன்றிய விளைவுகளினாலும் ஏற்பட்டது. அந்நிய நாடுகளிலிருந்து உருவாகும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் பயனாக இலங்கையின் பொருளாதாரம் எவ்வளவு தூரம் பழுதடையக்கூடியதாய் தொடர்ந்தும் இருந்துவருகிறது, என்பது 1961ம் ஆண்டில் இலங்கையின் அனுபவத்திலிருந்து தெளிவாகின்றது. ஏற்றுமதி விலைவாசிகள் மந்தமடைந்ததின் பயனாக மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி தடைப்பட நேர்ந்தது மட்டுமின்றி நாட்டின் சென்மதி நிலுவைப் பிரச்சனைகள், வரவு செலவுத்திட்டப் பிரச்சனைகள் ஆகியனவற்றைத் தீர்ப்பதும் கடினமாயிற்று.

1961ம் ஆண்டில் அரசாங்கத்தினாலும் மகாவங்கியினாலும் பல நடவடிக்கைகள் கையாளப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் இவ்வருடம் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வறிக்கையின் I-ம் பகுதியில் ஆராயப்பட்டுள்ளன. இலங்கையினது வெளிநாட்டுச் சென்மதி நிலைமையில் ஏற்பட்ட மாற்றத்தையும், அரசாங்க நிதி, வர்த்தக வங்கிக் கொடுகடன் ஆகியன உள்நாட்டு நாணய நிலைமையின்மேல் கொண்டுவந்த விளைவையும் இப்பகுதி பரிசீலனை செய்கின்றது. இந்த மாற்றங்களால் விலை மட்டங்களில் ஏற்பட்ட விளைவுகளும் ஆராயப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையின் II-ம் பகுதி, 1961ம் ஆண்டில் இலங்கைப் பொருளாதார இயக்கத்தின் அமைப்புப்பற்றி விரிவான உண்மைகளையும் புள்ளிவிபர அறிக்கைகளையும் தருகின்றது. அவை தேசிய வருமானமும் உற்பத்தியும், வெளிநாட்டு வர்த்தகம், விலைவாசிகளும் கூலிகளும், பணமும் வங்கித் தொழிலும், அரசாங்க நிதி, சென்மதி நிலுவை, ஆகியவற்றைத் தழுவியனவாகும்.

### 1. 1961ம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி

நடைமுறை விலைகளின்படி கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி 1961ம் ஆண்டில் ஓரளவு தடைப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி, 1960ம் ஆண்டிற்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1959ம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க 4.8 சதவீதமான உயர்ச்சியைக் காட்டியிருக்கையில் 1961-ம் ஆண்டிற்குரிய ஒப்பியல்பான வளர்ச்சி விகிதம் 2.4 சதவீதமானது எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இடம்விட்டு நோக்கின் 1961ம் ஆண்டு சராசரி தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி உண்மையாக 0.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

எனினும் 1961ம் ஆண்டில் ஏற்பட்ட குறைவான அதிகரிப்பு விகிதம் பெரும்பாலும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான உலகச் சந்தை விலைகள் வீழ்ச்சியடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. விலைமாற்றங்களுக்கு இடம்விட்டுக் கணித்து நோக்கின் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தக்க பெரும் அளவினதாகத் தோன்றுகின்றது. அதாவது, 1959ம் ஆண்டின் நிலையான விலைகளின்படி, 1961ம் ஆண்டிற்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு 4.2 சதவீதமாகவும், சராசரி தனியாளுக்கு உரிய உற்பத்தியின் அதிகரிப்பு 1.3 சதவீதமாகவும் உள்ளன. இவ்வதிகரிப்புகள் 1960ம் ஆண்டு காணப்பட்ட வளர்ச்சியிலும் பார்க்க ஓரளவு குறைவானதாக உள்ளன எனினும், இந்நாட்டின் பொருளாதாரத்தின் உண்மையான உற்பத்தியில் தொடர்ச்சியான அதிகரிப்பு இருந்தது என்பதை அவை காட்டுகின்றன.

உண்மை உற்பத்தியின் வளர்ச்சி விகிதத்தில் மிகப்பெரிய அளவான அதிகரிப்பு ஏற்றுமதித்துறையில் ஏற்பட்டது. இத்துறையின் உற்பத்தி உண்மை நியதியின் படி 1960ம் ஆண்டு இருந்ததிலும் பார்க்க 7.8 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. இது

பெரும்பாலும் தேயிலை, தெங்குப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்தமையால் ஏற்பட்டது. இதற்கு மறுபக்கத்தில் உள்நாட்டுத்துறையின் உண்மை உற்பத்தி ஒரு குறைந்த விகிதாச்சாரமான 2.7 சதவீதத்தால் அதிகரித்தது.

1961ம் ஆண்டிற்கு முன்னுள்ள ஆண்டுகளில் இலங்கையின் நுகர்ச்சி, மொத்த மூலதன ஆக்கம் முதலியனவற்றிற்கான மொத்தச் செலவீடுகள் இந்நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்க குறிப்பிடத்தக்க அளவால் உயர்ந்ததாக விளங்கின. பெரும்பாலும் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகளைக் குறைப்பதன் மூலம் அவ்விதம் மேலதிகமாகச் செலவீடு செய்துகொள்ள முடிந்தது. 1961ம் ஆண்டிலும், நுகர்ச்சி, மொத்த மூலதன ஆக்கம் ஆகியவற்றிற்கான மொத்தச் செலவீடுகள், மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்கக் கூடுதலாக இருந்தனவெனினும், அவ்வித மேலதிகச் செலவீடுகளின் மட்டம் குறைவடைந்தது என்பது சென்மதி நிலுவைக்குறையின் சுருக்கம் தெளிவாக்குகின்றது.

1961ம் ஆண்டில் ஏற்பட்ட நுகர்ச்சி, மொத்த மூலதன ஆக்கம், ஆகியவற்றிற்கான இணைந்த செலவீட்டை உண்மை நியதியின்படி நோக்கின் அது கிட்டத்தட்ட 1960ம் ஆண்டிற்குரிய அளவிலேயே இருந்தது. ஆயினும், 1961ம் ஆண்டில் இலங்கை தனது மொத்த மூலதன ஆக்கத்தை 1960ம் ஆண்டிற்குரிய அளவிலும் பார்க்க 5.3 சதவீதத்தால் உயர்த்திற்று. இது, நுகர்ச்சிச் செலவு ஓரளவு குறைக்கப்பட்டமையால் சாத்தியமாயிற்று. நிலையான இருப்புச்சொத்துக்களில் ஏற்பட்ட மொத்த மூலதன ஆக்கம் (கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் நீக்கி) 7.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1961ம் ஆண்டிற்குரிய நுகர்ச்சி முந்தைய வருடத்தின் மட்டத்திலும் பார்க்க 0.8 சதவீதம் குறைந்தது ஆகும்.

உண்மை நியதியின்படி 1961ம் ஆண்டின் மொத்த மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசாங்கத்துறை, தனிப்பட்டோர்துறை ஆகிய இரண்டிலும் காணப்பட்டது. அரசாங்கத் துறையின் மொத்த மூலதன ஆக்கம் 4.4 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், தனிப்பட்டோர் துறையின் மொத்த மூலதன ஆக்கம் 5.9 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. எனினும் கையிருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களை நீக்கிப் பார்க்கும் பொழுது இவ்வமைப்பு மிகவும் வேறுபாடுடையதாக உள்ளது. இவ்வகையில் அரசாங்கத்துறையின் நிலையான மூலதன ஆக்கம் 22.3 சதவீதத்தால் உயர்ந்திருக்கையில், தனிப்பட்டோர் துறையின் நிலையான மூலதன ஆக்கம் 1.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. அரசாங்கத்தின் கையிருப்புக்களில் உள்ள உணவுப்பொருட்கள் குறைந்தமையும், தனிப்பட்டோர் துறையின் கையிருப்புக்களில் உள்ள ஏற்றுமதிப் பொருட்கள் அதிகரித்தமையும், மேற்கூறிய மாற்றத்திற்கு முக்கியமான காரணமாகும். (1)

## 2. 1961-ம் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுச் சென்மதி நிலுவைகள்

1957ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டுவரை இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன. 1958, 1959, 1960 ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டு ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் முறையே 1287 இலட்சம் ரூபாய்களாகவும், 1992 இலட்சம் ரூபாய்களாகவும், 1927 இலட்சம் ரூபாய்களாகவும் உள்ளன. அடுக்கடுக்கான வரவு செலவுத்திட்டக் குறைகளின் பயனாக ஏற்பட்ட நீடித்த நாணய விரிவே இவ்வகையான நிலைமைக்கு முக்கிய காரணமாக உதவி புரிந்தது என முந்தைய ஆண்டு அறிக்கைகளில் மகாவங்கி எடுத்துக்காட்டியுள்ளது. அவ்வாண்டுகளில் 1960ம் ஆண்டின் பிற்பகுதி தவிர்ந்த ஏனைய காலம் முழுவதிலும் இலங்கையின் வர்த்தக மாற்றுவிகிதமும், பிரதான ஏற்றுமதிப் பொருட்களின் விலைகளும் ஓரளவு நிலையானவையாக இருந்தன.

கடந்த ஆண்டுகளோடு ஒப்பிடுகையில், 1960ம் ஆண்டில் இலங்கையின் அந்நிய ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆக 83 இலட்சம் ரூபாய்கள் ஆகும். எனினும், அவ்வாண்டில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்று சென்மதி நிலுவைக்குறை நிதியீட்

(1) முன்னர் உள்ளது போலவே, ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் வகுக்கப்பட்ட வரையறவுகளைப் பின்பற்றி, தேசிய வருமான மதிப்பீடுகளைக் கணிக்குமிடத்து "தனிப்பட்டோர் துறை" என்ற பாகுபாட்டினுள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், புகைவண்டி, மின்சாரம் ஆகிய திணைக்களங்கள் போன்ற அரசாங்க தொழிற்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

டப்பட்ட முறை சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றமாகும், அதாவது அந்நிய ஒதுக்கு நிதிகளைக் குறைப்பதன் மூலம் நிதியீட்டம் செய்வதற்குப் பதிலாக அந்நிய பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டது. இவ்வாறு 1961ம் ஆண்டு சித்திரையில் சர்வதேச நாணய நிதியிலிருந்து இலங்கை 638 இலட்சம் ரூபாய்களைப் பெற்றது. இத்தொகையை நீக்கிப் பார்க்கும் பொழுது, இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்குநிதியின் வீழ்ச்சி 621 இலட்சம் ரூபாய்களாக உள்ளது—இவ்வீழ்ச்சிகூட முந்தைய வருடங்களுக்குரிய வீழ்ச்சிகளிலும் பார்க்க குறைவானதாகவே உள்ளது.

1961ம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவையிற் காணப்பட்ட சீர்த்திருத்தம், ஏற்றுமதி விலைகள் மந்தமடைந்திருந்த போதிலும், ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சியடைந்த போதிலும்கூட ஏற்பட்டது. சகல ஏற்றுமதிகளினதும் மொத்தக் குறிகாட்டி (1958=100) 1960ம் ஆண்டிற்குரிய 104 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டு 95 புள்ளிகளுக்கு, 8.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி விலைகளின் மந்தமான தன்மை 1960ம் ஆண்டின் பிற்பகுதியில் ஏற்படத்தொடங்கியது. அவ்வாண்டில் நிலவிய உச்ச விலைகளோடு ஒப்பிடுகையில் 1961-ம் ஆண்டில் ஏற்பட்ட விலைவீழ்ச்சி மேலும் பெரிதளவானதாகும்.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் ஒவ்வொன்றினதும் விலை, வீழ்ச்சியடைந்தது. இரப்பருக்குரிய விலைக்குறிகாட்டி 1960ம் ஆண்டிலிருந்த 130 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டில் 105 புள்ளிகளுக்கு, 19.2 சதவீதத்தால், வீழ்ச்சியடைந்தது; தெங்குப் பொருட்களின் விலைக்குறிகாட்டி 103 புள்ளிகளிலிருந்து 80 புள்ளிகளுக்கு, 22.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இதே காலத்தில் தேயிலையின் விலைக் குறிகாட்டி 97 புள்ளிகளிலிருந்து 95 புள்ளிகளுக்கு, 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தேயிலை, தெங்குப்பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளை அதிகரிக்முடியாமற் போயிருந்தால், ஏற்றுமதிப் பொருட்களின் விலைமட்டங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பிரதிபலனுக மொத்த ஏற்றுமதி வருவாய்கள் இன்னும் எவ்வளவோ குறைந்திருக்கும். ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1960ம் ஆண்டிற்குரிய 4100 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1961ம் ஆண்டில் 4260 இலட்சம் இருத்தல்களுக்கு, 3.9 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு, இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உள்ள பெரும்பகுதிக் காலத்தில் நிலவிய போக்கின் தொடர்ச்சியாகும். தெங்குப் பொருட்களின் விலைமட்டங்கள் மந்தமடைந்தன எனினும் அவற்றின் ஏற்றுமதி அளவுக்குறிகாட்டி 1960ம் ஆண்டிற்குரிய 109 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டில் 154 புள்ளிகளுக்கு, 41 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. பிரதான ஏற்றுமதிப் பொருட்களுள், ஆக இரப்பர் சம்பந்தப்பட்டவரையில் மட்டுமே ஏற்றுமதி அளவும் வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 1960ம் ஆண்டிற்குரிய 2350 இலட்சம் இருத்தலில் இருந்து 1961-ம் ஆண்டில் 1970 இலட்சம் இருத்தல்களுக்கு 16 சதவீதத்தால் குறைந்தது.

எனினும், முன்னர் கூறியபடி, ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்ததின் பயனுக ஏற்பட்ட ஏற்றுமதிப் பெறுமான வீழ்ச்சியை ஈடுசெய்வதற்கு ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு போதியதாக இருக்கவில்லை. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டில் ஏற்றுமதி அளவுகளில் அதிகரிப்பு ஏற்பட்ட பொழுதிலும் இலங்கையின் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமானம் 1960ம் ஆண்டுக்குரிய ரூபா. 18320 இலட்சத்திலிருந்து 1961ம் ஆண்டு ரூபா. 17330 இலட்சத்திற்கு ரூபா. 990 இலட்சத்தால், வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வீழ்ச்சி, இலங்கை தனது சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட சமமற்ற தன்மையைச் சீராக்குவதற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்த ஒரு நேரத்தில் ஏற்பட்டமையால் அச்சீரமைப்பை மேலும் கடினமானதாக்கிற்று. அன்றியும், அந்நிய நாடுகளிலிருந்து உருவாகும் பொருளாதார ஏற்றத் தாள்வுகளின் பயனுக இலங்கையின் பொருளாதாரம் எவ்வளவு தூரம் பழுதடையக் கூடியதாய் தொடர்ந்தும் இருந்து வருகின்றது என்பதை அது விளக்குகின்றது.

1961ம் ஆண்டில் ஏற்றுமதி விலைகளும் பெறுமானமும் வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்ட பாதகமான பயன்களை, இறக்குமதிகளின் விலை வீழ்ச்சி ஓரளவு மட்டும் ஈடுசெய்தது. இறக்குமதிகளின் விலைக்குறிகாட்டி 1960ம் ஆண்டிற்குரிய 102 புள்ளிகளிலிருந்து 1961ம் ஆண்டு 101 புள்ளிகளுக்கு, 1.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1961ம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம், 1960ம் ஆண்டிலிருந்த 102 புள்ளிகளிலிருந்து, 94 புள்ளிகளுக்கு 7.8 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட சீர்த்திருத்தத்தில் ஒரு முக்கியமான அம்சம், இறக்குமதிகளின் அளவிலும் பெறுமானத்திலும் ஏற்பட்ட தீட்சணமான வீழ்ச்சியாகும். சுங்கப் புள்ளி விபரங்களின்படி, 1961ம் ஆண்டிற்குரிய இலங்கையின் இறக்குமதிகளின் பெறுமானம், 1960ம் ஆண்டிற்குரிய தொகையிலும் பார்க்க 13.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மொத்த இறக்குமதிகளின் பெறுமானம் 1960ம் ஆண்டிற்குரிய ரூபா 19600 இலட்சத்திலிருந்து, 1961ம் ஆண்டில் ரூபா 17030 இலட்சத்திற்கும் குறைந்தது. இது ரூபா. 2570 இலட்சம் கொண்ட வீழ்ச்சியாகும். முன்னர் கூறியபடி இவ்வீழ்ச்சியில் ஒரு பகுதி, இறக்குமதி விலைகள் குறைந்தமையால் ஏற்பட்டது. மொத்த இறக்குமதிப் பெறுமான வீழ்ச்சிக்கு இக் காரணி உதவிய பங்கு, இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி உதவிய பங்கிலும் பார்க்க குறைவானதாகும். கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து அதிகரித்துக்கொண்டுவந்த இறக்குமதி அளவுக் குறிகாட்டி, 1961ம் ஆண்டில் 95 புள்ளிகளுக்கு குறைந்தமை, 1960ம் ஆண்டிற்குரிய 113 புள்ளிகளுடனும் 1959ம் ஆண்டிற்குரிய 116 புள்ளிகளுடனும் ஒப்பிடத்தக்கது. அதாவது 1961-ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவு முந்தைய வருடத்திலும் பார்க்க 15.9 சதவீதம் குறைந்ததாக விளங்கியது.

எனினும் இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி எல்லா இறக்குமதிகளின் வகைளிலும் சரியளவானதாய் ஏற்படவில்லை. இறக்குமதி அளவுக் குறிகாட்டிகளை நோக்கின் நுகர்ச்சிப் பொருட்கள் என்ற தொகுதியிற்தான் மிகக் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டது. இத்தொகுதி 1960ம் ஆண்டிற்குரிய அளவிலும் பார்க்க, 25.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மறுபக்கத்தில், முதலீட்டப் பொருட்கள் 12.8 சதவீதத்தாலும், நடுத்தரமான பொருட்கள் 2.5 சதவீதத்தாலும், வீழ்ச்சியடைந்தன. நுகர்ச்சிப் பொருட்கள் என்ற தொகுதியில் உணவும் குடிவகையும், ஆடைகள் ஆகியன அல்லாத ஏனைய நுகர்ச்சிப் பொருட்களிற்தான் மிகத் தீவிரமான வீழ்ச்சி ஏற்பட்டது. இத்தொகுதியைச் சேர்ந்த பொருட்களின் இறக்குமதிகள் முந்தைய வருடத்திலும் பார்க்க 66.9 சதவீதமான அளவால் வீழ்ச்சியுற்றன. உணவும் குடிவகையும் என்ற தொகுதிப் பொருட்களின் இறக்குமதி அளவு 7.7 சதவீதத்தாலும், ஆடைகள் என்ற தொகுதிப் பொருட்களின் அளவு 12.8 சதவீதத்தாலும் குறைந்தன.

கடந்த மூன்று வருட காலத்தில் இறக்குமதி அளவுக் குறிக்காட்டிகளிலும், விலைக் குறிக்காட்டிகளிலும் ஏற்பட்ட நிலைமாற்றங்கள் பின்வருமாறு:—

அட்டவணை I—1

இறக்குமதி அளவுகளினதும் விலைகளினதும் குறிகாட்டிகள்

(1958 = 100)

| | 1959 | | 1960 | | 1961 | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை |
| நுகர்சிப் பொருட்கள் (சகலதும்) .. .. | 112 | 101 | 111 | 101 | 83 | 100 |
| உணவும் குடிவகையும் .. .. .. | 111 | 102 | 104 | 101 | 96 | 99 |
| ஆடைகள் .. .. .. .. .. | 89 | 103 | 86 | 108 | 75 | 111 |
| ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் .. .. .. | 129 | 98 | 148 | 98 | 49 | 96 |
| நடுத்தரமான பொருட்கள் .. .. .. | 121 | 95 | 121 | 94 | 118 | 89 |
| முதலீட்டப் பொருட்கள் .. .. .. | 131 | 111 | 117 | 120 | 102 | 112 |

சுங்கப் புள்ளி விபரங்களின்படி ஏற்றுமதிப் பெறுமானம் குன்றிய பொழுதிலும் கூட இறக்குமதிப் பெறுமானம் தீட்சணமாக வீழ்ச்சியடைந்தமையின் பயனுல் வணிகப் பொருட்களின் பேரில் 300 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வர்த்தகமிகை தோன்றியது. இதற்கு எதிர்மாருக, 1959ம் ஆண்டிலும், 1960ம் ஆண்டிலும் ஏற்பட்ட வர்த்தகக் குறைகள், முறையே ரூபா. 2510 இலட்சமாகவும், ரூபா. 1280 இலட்சமாகவும் இருந்தன.

இதுவரை மேலே கூறப்பட்ட ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமானங்களின் எண் தொகைகளும், அவற்றிலிருந்து பெறப்பட்ட வர்த்தக நிலுவை சம்பந்தமான எண் தொகைகளும், குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் இலங்கையிலிருந்து வெளியேறியதும் உள்வந்ததுமான பொருட்கள் சம்பந்தமாக சுங்கத் திணைக்களத்தினுல் தரப்பட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டவை. ஆனுல் ஏற்றுமதி இறக்குமதிகள் ஒரு நாட்டின் சென்மதி நிலுலையின்மேலும் அந்நிய ஒதுக்குநிதிகளின்மேலும் உண்டாக்கும் பிரதிபலன்களைப் பார்க்கின், அவை உள்ளபடியாக ஏற்பட்ட அந்நிய வருமானங்களிலும் அந்நிய கொடுப்பனவுகளிலும், தங்கியுள்ளன. இவ்வித பற்றுவரவுகள் சம்பந்தமான விபரங்கள் செலாவணிக் கட்டுப்பாட்டு ஏடுகளிலிருந்து பெறப்பட்டு, சென்மதி நிலுவையின் வணிகப்பொருட் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன. அவை சுங்கப் புள்ளிவிபரங்களிற் காணப்படும் ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமானங்களுடன் ஒத்துவரமாட்டா. இதற்கு உள்ள ஓரளவான காரணம், ( 114ம்) பக்கத்தில் விளக்கியுள்ளபடி, காலவேற்றுமைகளும் பாகுபாட்டு வேற்றுமைகளும் ஆகும்.

சென்மதி நிலுவை நியதியின்படி, வணிகப் பொருட்களின் கணக்கில் வெளியூர்களிலிருந்து பெற்ற வருமானம் 1960 ஆண்டிற்குரிய 17960 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டில் 17197 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைந்தது. ஆயினும் வணிகப் பொருட்களின் பேரில் ஏற்பட்ட கொடுப்பனவுகள் இன்னும் கூடிய அளவால் குறைந்து, 1960ம் ஆண்டிற்குரிய 19988 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டில் 17824 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. எனவே வணிகப் பொருட்களின் கணக்கில் உள்ள பாதகமான குறை 1960ம் ஆண்டிற்குரிய 2028 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961-ம் ஆண்டில் 627 இலட்சம் ரூபாய்களுக்குச் சுருங்கியது. 1960ம் ஆண்டிற்கும் 1961ம் ஆண்டிற்கும் இடையில் வணிகப் பொருட் கணக்குகளின் குறைவில் ஏற்பட்ட இந்த 1401 இலட்சம் ரூபாய்கள் (1) கொண்ட சுருக்கம் ஏற்றுமதி இறக்குமதிகளின் பேரில் இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட சீர்திருத்தத்தைக் காட்டுகின்றது.

1961ம் ஆண்டில் நடைமுறைக் கணக்கிலுள்ள கட்புலனுகா விடயங்களின் பேரில் உள்ள அந்நிய கொடுப்பனவுகளும் ஒரு நிதானமான அளவாற் குறைந்தன. எனவே சகல சேவைகளின் பேரிலும் உள்ள நிலுவைக்குறை 1960ம் ஆண்டிற்குரிய 393 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டில் 337 இலட்சம் ரூபாய்களுக்குச் சுருங்கியது. இத்தொகுதியில் உள்ள விடயங்களில், வெளியூர்ப் பிரயாணங்களின் பேரில் (உத்தியோகப்பூர்வமான பிரயாணங்களும், பிரத்தியேகமான பிரயாணங்களும்,கல்விச் செலவுகளும் உட்பட; ஆனுல் பயணச்சீட்டுகளுக்கான செலவுகள் நீக்கி) ஏற்பட்ட குறை, 1960ம் ஆண்டிற்குரிய 243 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டில் 177 இலட்சம் ரூபாய்களுக்கும், முதலீட்டு வருமானங்களின் பேரில் உள்ள நிலுவைக் குறை 1960ம் ஆண்டிற்குரிய 442 இலட்சம் ரூபாய்களிலிருந்து 404 இலட்சம் ரூபாய்களுக்கும், சுருங்கின. மூலதன கணக்கிலேயும், தனிப்பட்டோர் மூலதனங்களின் வெளியேற்றத்தில் தொடர்ந்தும் சுருக்கம் ஏற்பட்டது. குறுகிய கால மூலதனங்களும் உட்பட்ட தனிப்பட்டோர் மூலதனக் கணக்கில் ஏற்பட்ட நிகர வெளியேற்றம், 1960ம் ஆண்டிலிருந்த 57 இலட்சம் ரூபாய்களுக்கு எதிராக 1961-ம் ஆண்டில் 53 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இவ்விடயங்களின் தொகை மொத்த அந்நிய கொடுப்பனவுகளில் சிறிய விகிதாச்சாரமானதாக விளங்குகின்ற

---

(1) ஏற்றுமதி இறக்குமதி விபரங்கள் கணிக்கப்படும் முறையில் வேற்றுமைகள் உள்ள போதிலும், சென்மதி நிலுவையில் உள்ள வணிகப் பொருட்களின் கணக்கில் ஏற்பட்ட மாற்றத்திற்கும், சுங்க விபரங்களில் உள்ள வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் ஓரளவு நெருங்கிய ஒருமைப்பாடு காணப்படுகின்றது. எனவே 1960ம் ஆண்டிற்கும் 1961ம் ஆண்டிற்கும் இடையில் வர்த்தக நிலுவையில் ஏற்பட்ட சுருக்கம் 1580 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

மையாலும், அவ்விடயங்களின் மேல் உள்ள கட்டுப்பாடுகள் 1961ம் ஆண்டிற்கு முன்னர் உள்ள காலந் தொட்டே இருந்தமையினுலும், அந்நிய கொடுப்பனவுகளில் ஏற்பட்ட மொத்தக் குறைப்புக்கு இவ்விடயங்கள் உதவிய பங்கு சிறிதாக விளங்கிற்று.

1961ம் ஆண்டிலும் அதற்கு முன்னுள்ள சில ஆண்டுகளிலும் உள்ள இலங்கையின் சென்மதி நிலுவைக் கணக்குகளை பின்வரும் அட்டவணையிற் சுருக்கித் தரப்பட்டுள்ளது.

அட்டவணை I—2

சென்மதி நிலுவைகள் 1957 முதல் 1961 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1957 நிகர | 1958 நிகர | 1959 நிகர | 1960 நிகர | 1961 தற்காலிகமான நிகர |
|---|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள் .. | — 95.6 | — 89·6 | — 182·9 | — 202·8 | — 62·7 |
| 2. சேவைகள் .. .. | — 60.1 | — 40·2 | — 13·5 | — 39·3 | — 33·7 |
| 3. நன்கொடைகள் .. | — 39.6 | — 23·1 | — 11·6 | + 21·6 | + 21·0 |
| 4. நடைமுறைக் கணக்கு நிலுவை .. .. | — 195.3 | — 152·9 | — 208·0 | — 220·5 | — 75·4 |
| 5. தனிப்பட்டோர் மூலதனம் | — 38·4 | — 4·0 | + 1·7 | — 5·3 | — 5·7 |
| **நிதியீட்டிய வகை** | | | | | |
| 6. அரசகரும மூலதனமும் வங்கித் தொழில் மூலதனமும் (அ) .. | | | | | |
| (i) அந்நிய ஒதுக்கு நிதிகளில் மாற்றம் .. | + 213.8 | + 128·7 | + 199·2 | + 192·7 | + 8·3 |
| (ii) நிகர அந்நிய பொறுப்புக்களில் மாற்றம் .. | + 19.7 | + 43.8 | + 40·3 | + 3·2 | + 88.0 |
| (iii) ஏனைய (ஆ) .. | — | — | — 35·7 | — | — 2·3 |
| 7. பிழைகளும் தவறுகளும் | + 0·2 | — 15.6 | + 2·5 | + 29·9 | — 12.9 |

(அ) சக அடையாளங்கள், ஒதுக்கு நிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியையோ பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பையோ குறிப்பனவாகும்.

(ஆ) இவ்விடயத்திற்கு எதிராகக் காட்டப்பட்டிருக்கும் எண்தொகைகள் சர்வதேச நாணய நிதி, சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றிற்கு இலங்கையின் அதிகரித்த பங்குகளின் பேரிற் செலுத்தப்பட்ட அந்நிய நாணயங்களைக் குறிப்பனவாகும்.

கவனிப்பு: சென்மதி நிலுவை விபரங்கள் கொடுப்பதில், சர்வதேச முறைகளைப் பின்பற்றி, இவ்வாண்டு அறிக்கையில் இரண்டு முக்கியமான மாற்றங்கள் புகுத்தப்பட்டுள்ளன. முதலாவது மாற்றம் வணிகப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதிகளை எடுத்துக் காட்டுகிற அடிப்படை சம்பந்தமானதாகும். முன்பு இவைகளிற் சில, கொள்விலை காப்புறுதி கப்பற்கூலி என்ற அடிப்படையிலும் வேறு சில, ஏற்றுமதி விலை என்ற அடிப்படையிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப்பொழுது, ஏற்றுமதிகள் முற்ருக ஏற்றுமதி விலை என்ற அடிப்படையிலும், இறக்குமதிகள் முற்ருக கொள்விலை காப்புறுதி கப்பற்கூலி என்ற அடிப்படையிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இரண்டாவது மாற்றம் வெளிநாட்டு ஒதுக்குநிதிகள் சம்பந்தப்பட்டதாகும். முன்பு, அவை அந்நிய நிருபர்களுடன் உள்ள பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டன. இப்பொழுது அவை வங்கித் தொழில்களுடனும் அரசாங்கத்துடனும் உள்ள பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளன. இவ்விரு மாற்றங்களும் ( 108 ம்) பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளன. புதிய முறையிற் கணிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் பின்னிணைப்பு IIல் உள்ள 25 (இ) 26 ஆகிய அட்டவணைகளில் தரப்பட்டுள்ளது.

எவ்வளவு தூரம் அந்நிய ஒதுக்கு நிதிகளைக் குறைப்பதன் மூலமாகவும் அந்நிய பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமாகவும் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட மொத்தக் குறை (தனிப்பட்டோர் மூலதனத்தில் ஏற்பட்ட சிறு மாற்றங்களும்) ஈடு செய்யப்பட்டது என்பதை மேலேயுள்ள எண்தொகைகள் காட்டுகின்றன. முன்னர் கூறியவாறு, 1961ம் ஆண்டில் நடைமுறைக் கணக்குக் குறைக்கு நிதியீட்டிய வகையில் ஒரு மாற்றம் காணப்பட்டது. அதாவது அந்நிய ஒதுக்குநிதியிலிருந்து எடுப்பதற்கு பதிலாக அந்நிய பொறுப்புக்களை அதிகரிப்பதின் மூலம் அது நிதியீட்டப்பட்டது. இதற்கு எதிர்மாருக, முந்தைய ஆண்டுகளின் நடைமுறைக் கணக்குகளில் ஏற்பட்ட குறைகளில் பெரும்பகுதி இலங்கையின் அந்நிய ஒதுக்குநிதிகளின் வீழ்ச்சியாலேயே நிதியீட்டப்பட்டன என்பது மேலேயுள்ள அட்டவணையிற் தெளிவாகின்

றது. 1961ம் ஆண்டு சித்திரை மாதத்தில் சர்வதேச நாணய நிதியிலிருந்து (1) எடுக்கப்பட்ட 538 இலட்சம் ரூபாய்கள், 1961ம் ஆண்டில் அந்நிய பொறுப்புக்களில் ஏற்பட்ட 880 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பில் ஒரு முக்கியமான பகுதியாகும். ஏனைய பொறுப்புக்களாவன, சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியிலிருந்து எடுக்கப்பட்ட தொகைகள், ஏனைய கடன்கள், சென்மதி ஒப்பந்தங்களின் கீழ் இலங்கையினுல் கொடுக்கப்படவேண்டிய தொகைகளின் அதிகரிப்புகள், ஆகியனவாகும். சென்மதி ஒப்பந்தங்களின் கீழ் இலங்கைக்கு வருமதியான தொகையில் ஏற்பட்ட மாற்றங்கள் அந்நிய ஓதுக்கு நிதிகளின் மாற்றங்களோடு சேர்க்கப்பட்டுள்ளன.

முந்தைய ஆண்டுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 1961ம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட சீர்திருத்தங்களைப் பற்றிய விளக்கங்கள் மேலேயுள்ள பகுதிகளிற் கூறப்பட்டது. ஆயினும் இவ்விதமான சீர்திருத்தங்கள் ஏற்பட்டபொழுதிலும் இலங்கையின் சென்மதி நிலுவைகள் 1961ம் ஆண்டில் தொடர்ந்தும் பாதகமாக விளங்கியது என்பது கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயமாகும். இறக்குமதிகளைக் குறைப்பதற்காக பயன்தரத்தக்க தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பொழுதிலும் நடைமுறைக் கணக்கில் 754 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு குறைவு தோன்றியது. அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் குறைக்கப்பட்டு அபிவிருத்தித் தேவைகளும் அதிகரிக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில் இறக்குமதிகளின் பேரில் உள்ள செலவீடுகளை மேலும் குறைப்பதற்கான வாய்ப்புக்கள் குறுகிக்கொண்டே செல்லும். எனவே ஏற்றுமதி வருமானங்களில் உயர்சியோ அல்லது அதற்கு பதிலாக அந்நிய பொறுப்புக்களில் மேலும் அதிகரிப்போ ஏற்படும் வரை இலங்கையின் அந்நிய ஓதுக்குநிதிகளின்மேல் கடுமையான அமுக்கங்கள் தொடர்ந்தும் நிலவக்கூடும். அதாவது, 1961ம் ஆண்டில் ஓரளவு சீர்த்திருத்தம் ஏற்பட்டதெனினும் இலங்கை தனது சென்மதி நிலுவை சம்பந்தமாக ஒரு சமநிலையை இன்னமும் அடையவேண்டியிருக்கிறது.

இலங்கையின் அந்நிய ஓதுக்குநிதி நிலைமையின் சுருக்கம் பின்வருமாறு. 1961ம் ஆண்டு முடிவில் இலங்கையின் அந்நிய ஓதுக்குநிதிகளின் தொகை 5330 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.(2) அவ்வாண்டின் இறக்குமதிக் கொடுப்பனவுகளோடு (கட்புலனுகாதவையும் உட்பட) ஒப்பிடுகையில் இது 25.8 சதவீதமாக உள்ளது. முற்காலங்களில் நிலவிய மட்டங்களிலும் பார்க்க இது ஒரு குறைவான மட்டமாகும். அன்றியும் எதிர்காலத்தில் எழக்கூடிய பொருளாதார அபிவிருத்தியைத் தொடர்ந்தும், ஏனைய தேவைகளின் பயனுகவும், இறக்குமதிகளின்மேற் தோன்றக்கூடிய அமுக்கங்களின் சந்தர்ப்பத்திலும், ஏற்றுமதி வருமானங்களில் மேலும் பாதகமான போக்கு ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்திலும், மேற்கூறிய அந்நிய ஓதுக்குநிதித் தொகை குறைவானதாகவே விளங்குகின்றது. 1961ம் ஆண்டு முடிவில் இலங்கை மகாவங்கியின் சர்வதேச ஓதுக்குநிதி 1847 இலட்சம் ரூபாய்களாகவும், அது இலங்கையின் மொத்த அந்நிய ஓதுக்குநிதியில் 34·7 சதவீதமாகவும் விளங்கியது. ஒப்பிட்டு நோக்கின் 1960ம் ஆண்டு முடிவில் மகாவங்கியின் சர்வதேச ஓதுக்குநிதி 1902 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. 1961ம் ஆண்டை 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சர்வதேச ஓதுக்குநிதியின் திரவ நிலையில் குறிப்பிடும்படியான மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. 1961ம் ஆண்டு முடிவில் இறைசேரி உண்டியல்கள், கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் ஆகியன உட்பட, வெளியூர்களி

---

(1) சர்வதேச நாணய நிதியிலிருந்து ''எடுத்தல்'' என்பது ஒரு அங்கத்துவ நாடு தனது சொந்த நாணயத்தில் சரிநிகரான தொகையை மேற்படி நிதிக்கு மாற்றிக் கொடுத்து அதற்கு எதிராக அந்நிய செலாவணிகளைக் கொள்வனவு செய்தாற் போன்றது. சர்வதேச நாணய நிதியின் உடன்படிக்கை விதிகளின்படி, ஒரு அங்கத்துவ நாடு அவ்விதம் மாற்ருகக் கொடுத்த தனது நாணயத்தை, அவ்விதம் ''எடுத்தல்'' செய்த திகதயிலிருந்து மூன்று வருடம் முதல் ஐந்து வருடத்திற்கு முன் திருப்பிக் கொள்வனவு செய்துகொள்ள கடமைப்பட்டுள்ளது. எனவே இந்த ''எடுத்தல்'' சர்வதேச நாணய நிதிக்கும் ''எடுத்தல்'' செய்யும் நாட்டில் உள்ள நிர்வாக அலுவலகத்திற்கும் (இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கை மகாவங்கிக்கும்) இடையே ஏற்படும் அந்நிய செலாவணித் தொழிற்பாடாகும். இத்தொழிற்பாடு மூன்று வருடத்திற்கும் ஐந்து வருடத்திற்கும் இடையில் மறுபக்கமாக மாறி அமையத்தக்கது. 1961ம் ஆண்டு சித்தரையில் இலங்கை மகா வங்கியினுல் இவ்விதம் கொள்வனவு செய்யப்பட்ட 538 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை இவ்வங்கியின் சர்வதேச ஓதுக்குநிதியைப் பலப்படுத்த உதவி புரிந்தது.

(2) விபரங்கள் கொடுக்கப்படும் அடிப்படை முறை திருத்தியமைக்கப்பட்ட விளக்கத்தை ( 108 ம்) பக்கத்திற் காண்க.

லுள்ள பணநிலுவைகளின் மொத்தம் 922 இலட்சம் ரூபாய்களாக அல்லது மொத்த ஒதுக்குநிதிகளில் 49.9 சதவீதமாக இருந்தது. அதே காலத்தில் அந்நிய அரசாங்க பிணைகளின் தொகை 925 இலட்சம் ரூபாய்களாக, அல்லது மொத்த ஒதுக்குநிதியில் 50.1 சதவீதமாக விளங்கியது.

மறுபுறத்தில் 1960ம், 1961ம் ஆண்டுகளில் இலங்கையின் அந்நிய பொறுப்புக்கள் இருந்த நிலைமை பின்வருமாறு:—

அட்டவணை I—3

இலங்கையின் அந்நிய பொறுப்புக்கள் (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பொறுப்புக்கள் | வெளிநின்ற நிலுவைகள் | | மாற்றம் |
|---|---|---|---|
| | 1960 | 1961 | |
| 1. சென்மதி ஒப்பந்தங்களின் கீழ் இலங்கையினாற் கொடுக்கப்படவேண்டியவை .. | 0.8 | 22.1 | + 21.3 |
| 2. சர்வதேச நாணய நிதியிலிருந்து பெற்றவை | — | 53.8 | + 53.8 |
| 3. ஸ்டேர்லிங் கடன்கள் .. .. | 167·9 | 167·9 | — |
| 4. ஏனைய அந்நிய கடன்கள் (பெறப்பட்டதும் வெளிநின்றதும்) .. .. | 129.2 | 148.2 | + 19.0 |
| மொத்தம் .. .. | 297·0 | 392·0 | + 94.1 |

(அ) அந்நிய செலாவணியிற் கொடுக்கப்படவேண்டிய பொறுப்புக்கள். அமெரிக்க பொதுசனச் சட்டம் 480ன் கீழ் பெற்ற உதவியின் பயனக எழுந்த உள்நாட்டு நிதிகளின் நிலுவைகளும், வர்த்தக வங்கிகளில் உள்ள இலங்கையின் வதிவற்ற கணக்கு நிலுவைகளும் நீக்கப்பட்டுள்ளன. அந்நிலுவைகள் 1960ம் ஆண்டிற்குரிய 789 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1961ம் ஆண்டில் 729 இலட்சம் ரூபாய்களுக்கு, 60 இலட்சம் ரூபாய்களால் குறைந்தன.

மேலேயுள்ள அட்டவணை காட்டும் வண்ணம் இலங்கையின் அந்நிய பொறுப்புக்கள் 1961ம் ஆண்டில் அதிகரித்துள்ளன எனினும், நிலுவையில் இருந்த மொத்தத் தொகை, குறிப்பாக நீண்டகாலப் பொறுப்புக்களின் தொகை, பொருளாதார வளர்ச்சியடையும் ஒரு நாட்டின் தேவைகளுக்கேற்ப ஒரு நிதானமான மட்டமாகவே அது விளங்குகின்றது.

### 3. உள்நாட்டுப் பண நிலைமை

இறக்குமதிகளை நேரடியாக மட்டுப்படுத்தும் நோக்கமாகக் கொண்டெழுந்த நடவடிக்கைகளின் பயனகவே, 1961ம் ஆண்டில் சென்ற பகுதியில் விளக்கிக் காட்டப்பட்ட இறக்குமதிகளின் குறைப்பும், இதன் விளைவாகிய வெளிநாட்டுச் சென்மதி நிலையின் சீர்திருத்தமும் ஏற்பட்டன. 1960ம் ஆண்டளவில் சென்மதி நிலுவையின் சமமற்ற தன்மையும் வெளிநாட்டு ஒதுக்குநிதிகளின் இழப்பும் ஓர் பாரதூரமான நிலையையடைந்தமையால், திடமான திருத்தச் செயலாற்றம் அத்தியாவசியமாயிற்று. உள்நாட்டு நாணய விரிவைத் திருத்த வேண்டியது தான் அடிப்படைத் தேவையாக விளங்கிய பொழுதிலும், தேசத்தின் வெளிநாட்டுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கு இறக்குமதிகளின் பேரில் திருத்த நேரடிக் கட்டுப்பாட்டை உடனடியாகக் கொண்டுவரும் தேவையும் எழுந்தது.

இறக்குமதிகளின் நேரடிக் குறைப்பைக் குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கைகள், பரந்த பல வகைப் பொருட்களின் பேரில் உள்ள அளவுக் கட்டுப்பாடுகளை தீவிரமாக்குகின்றனவாயும், இறக்குமதித் தீர்வைகளை அதிகரிக்கச் செய்கின்றனவாயும் அமைந்தன. சிலவித இறக்குமதிகளுக்காக வங்கிக் கொடுகடனை மட்டுப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டு 1960ல் புகுத்தப்பட்ட தேர்ந்தெடு நடவடிக்கைகள் தொடர்ந்து இயங்கின. இந்நடவடிக்கைகளினதும் வேறு சில காரணங்களினதும் இணைந்த விளைவையே 1961ல் ஏற்பட்ட இறக்குமதிகளின் குறைப்பு பிரதிபலிக்கின்றதெனினும், இப்பயனை அடைவதற்கு நேரடி அளவுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் நீடித்த இயக்கமே, பிரதான முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது.

முன்பு வரையறுப் பொது இறக்குமதி உத்தரவுச் சீட்டின் கீழிருந்த 49 விடயங்கள், 1961ம் ஆண்டு தை மாதத்தில் தனிப்பட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதே ஆண்டில் மேலும் சில விடயங்கள் இவ்வகையில் சேர்க்கப்பட்டன. இத்துடன் சில பொருட்களின் இறக்குமதி முற்றுகத் தடைப்பட்டது. 1961ம் ஆண்டு ஆடியில் தனிப்பட்ட உத்தரவுச் சீட்டின் கீழ் இறக்குமதி செய்யப்படும் 31 விடயங்களுக்கான இறக்குமதியனுமதிப் பங்குகள் அறிவிக்கப்பட்டன. இதர விடயங்களில் பலவற்றிற்கு இவ்வாண்டு உத்தரவுச் சீட்டுகள் வழங்கப்படவேயில்லை. 1961ம் ஆண்டு ஏற்பட்ட இறக்குமதிகளின் வீழ்ச்சியில் மேற்கூறிய கட்டுப்பாடுகள் நிச்சயமாக ஓர் பிரதான அங்கம் வகித்தது. உதாரணமாக 63ம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ளபடி, அளவுக் கட்டுப்பாடுகளுக்குட்பட்ட விடயங்களில் உணவு, பானங்கள் முதலிய தொகுதியிலுள்ள இறக்குமதிகள் 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1961ம் ஆண்டு 265 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைய, மோட்டார் வண்டிகளின் இறக்குமதிகள் 451 இலட்சம் ரூபாய்களாலும், கைக்கடிகாரங்களின் இறக்குமதிகள் 285 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியடைந்தன. 1961ம் ஆண்டு ஆடைவகைகளின் இறக்குமதிகளும் 219 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்தன. அளவுக் கட்டுப்பாடுகளுடன், 1961ம் ஆண்டு தையிலும் ஆடியிலும் விதிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வைகளின் தீட்சணமான அதிகரிப்புக்கள், மேலும் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி, அதனுல் மொத்த இறக்குமதிகளைக் குறைக்க உதவிபுரிந்தன.

முன்னரே இறக்குமதி செய்யப்பட்ட கையிருப்புக்களேயும், ஈடுசெய்யக்கூடிய உள்நாட்டு உற்பத்தியதிகரிப்புக்களேயும் தவிர, 1961ம் ஆண்டு இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, உள்நாட்டுப் பாவிப்புக்குக் கிடைக்கக்கூடிய பொருட்களில் பாரதூரமான குறைப்பைக் குறிக்கும். முன்னரே காட்டப்பட்டுள்ளபடி, இதனுல் முதலீட்டுப் பொருட்களும் நடுத்தரப் பொருட்களும் ஓரளவு பாதிக்கப்பட்ட பொழுதிலும், இக்குறைப்பு, குறிப்பாக நுகர்ச்சிப் பொருட்கள் சம்பந்தப்பட்டதிலேயே பெரிதாக விளங்கிற்று. அளவுக் கட்டுப்பாடுகளின் மூலம் பொருட்களின் நிரம்பலில் ஏற்படும் குறைப்பு இந்நிலேயில் அத்தியாவசியமாக விளங்கியபொழுதிலும் நாணயக் கேள்வியின் மொத்தத்திலேயோ அல்லது கொள்வனவு வலுவிலேயோ நேரடிக் குறைப்பை விளேவிக்க மாட்டாது. ஆகையால் நாணய விரிவுப்போக்கு தொடர்ந்து கொண்டே செல்லுமாயின் சேருகின்ற வீக்க அமுக்கங்கள் தோன்றக் கூடும். இவை தடுக்கப்படாவிடின், விலேகள் செலவுகள் முதலியவற்றின் பொது மட்டத்தில் பிரதிகூலமான விளேவுகளேக் கொண்டுவரும்.

சென்ற ஆண்டு அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, 1961ம் ஆண்டுக்கு முந்திய உடனடி ஆண்டுகளில் ஏற்கனவே நாணயவிரிவுப் போக்கு ஒன்று காணப்பட்டு வந்தது. அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டக் குறைகள் தொடர்ந்து வளர்ந்து கொண்டேயிருந்தமைதான் இதற்கு முதற்காரணமாக இருந்தது. அத்துடன் தனிப்பட்டோர் துறைக்காக உண்டாகிய மேலதிக கொடுகடனும் மேற்கூறிய நாணய விரிவில் சிறியதோர் அங்கம் வகித்தது. இக்காலத்தில் ஏற்றுமதி வருவாய்களுக்கு மேலதிகமான இறக்குமதிச் செலவீடுகள் மேற்கூறிய காரணிகள் கொண்டு வரக்கூடிய விரிவு விளேவுகளே மட்டுப்படுத்த உதவியதெனினும், அவற்றுல் தேசத்தின் வெளிநாட்டுச் சொத்துக்களின் பெரும் பகுதியை இழக்க நேரிட்டது. ஆகவே இலங்கையின் வெளிநாட்டுச் சென்மதி நிலேயைத் திருத்த வேண்டிய தேவை எழுகின்ற இந்த நிலேபரம் இறக்குமதிகளில் ஓர் நேரடிக் குறைப்புக்கு மாத்திரமின்றி, அடிப்படை நாணய விரிவையும் தடுப்பதற்கும் நடவடிக்கைகளே எடுக்கும்படி தூண்டியது. அளவுக் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டதுடன் நாணய விரிவைத் தடுக்கவேண்டிய தேவை ஒரு புதிய முக்கியத்துவத்தைப் பெற்றது. ஏனெனில் இறக்குமதிப் பொருட்களின் நிரம்பல்களில் ஏற்பட்ட குறைப்பின் வீக்க விளேவுகளே மிகச் சிறிதாக்குவதற்கான தேவை இப்பொழுது உண்டாகியுள்ளது.

இத்தகைய நிலேமையைச் சமாளிப்பதற்கு அரசாங்கமும், மகாவங்கியும் மேற்கொண்ட நடவடிக்கைகள், நாணயப்பகுதியில் இயங்கிக்கொண்டிருக்கும் விரிவுக் காரணிகளே அடக்குவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளேயும், மொத்தக் கேள்வியும் கொள்வனவு வலுவும் மேலதிக மட்டங்களே அடையாவண்ணம் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளேயும் கொண்டுள்ளன. இந்த முயற்சிகள் பிரதானமாக விரிவைக் கொண்டுவரும் அரசாங்க வரவு செலவுத் திட்-

டக் குறையைக் குறைப்பதற்கான அரசிறை நடவடிக்கைகளாகவும், வர்த்தக வங்கிக் கொடுகடனின் மொத்தத்தையும், நோக்கத்தையும் இயக்குவதற்கான கொடுகடன் கொள்கைகளாகவும் அமைந்தன. இந்த நடவடிக்கைகளின் இயல்பும், இவை கொண்டுவந்த விளைவுகளும், நிலைமையை சமாளிப்பதற்கு இவை எவ்வளவு தூரம் பயன்பட்டன என்பதும், பின்வரும் பகுதிகளில் சற்று விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

### (அ) அரசாங்க நிதி இயக்கத்தின் விரிவுப் பாதிப்பு

ஐப்பசி மாதம் முதலாம் திகதி தொடக்கம் புரட்டாதி 31ம் திகதிவரையுள்ள அரசாங்க நிதியாண்டின்படி அரசாங்க வரவு செலவுத் திட்ட இயக்கங்களை ஆராய்தல் வசதியாக இருக்கும். 1961ம் பஞ்சாங்க ஆண்டு, 1960–61 நிதியாண்டின் ஒரு பகுதியையும் 1961–62ம் நிதியாண்டின் ஒரு பகுதியையும் உடையதாக விளங்குகின்றது. 1961ம் ஆண்டின் முதல் 9 மாதங்களைத் தழுவிய 1960–61 நிதியாண்டிற்கு மட்டுமே வரவு செலவுத் திட்டத் தேறுமானங்களை அறியக் கூடியதாக உள்ளது. 1961–62ம் நடைமுறை ஆண்டிற்கானவற்றை ஆராய்வதற்கு பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் ஓர் அடிப்படையாக உதவுகின்றன.

1960–61க்கு முந்தைய நிதியாண்டுகள் ஒவ்வொன்றிலும் அரசாங்க வரவு செலவுத் திட்ட பணக்குறைகள் 4000 இலட்சம் ரூபாய்களுக்குச் சற்று மேலதிகமாக விளங்கின. உதாரணமாக 1959–60ல் ஏற்பட்ட பணக்குறை 4175 இலட்சம் ரூபாய்களாகும். இதில் 2511 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகைக்கு விரிவைக் கொண்டுவரும் மூலாதாரங்களிலிருந்து, முக்கியமாக வங்கிகளிடமிருந்து, பெற்ற கடன்பாடு மூலம் நிதியீட்டப்பட்டது. அந்த ஆண்டில் வாக்களிக்கப்பட்ட மொத்தச் செலவுகள் 18200 இலட்சம் ரூபாய்களாகவும் (1) மொத்த வருமானங்கள் 14038 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. செலவுகளைக் குறைப்பது அல்லது மட்டுப்படுத்துவது மூலமோ, அல்லது வருமானங்களின் அதிகரிப்புக்கள், விரிவைக் கொண்டுவராத இதர நிதியாதாரங்களின் அதிகரிப்புக்கள், முதலியனவற்றின் மூலமோ 1960–61ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டக் குறையையும் விரிவைக் கொண்டு வரும் நிதியீட்டத்தின் அளவையும் சிறிதாக்குவது எவ்வளவு கடினமானது என்பதை இவ்வெண் தொகைகள் விளக்கிக் காட்டுகின்றன. மேலும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட தொகைகளை அடையாமலிருக்கும் அபிவிருத்திச் செலவீடுகளை அதிகரிக்கவும், பொருளாதார இயக்கத்தின் விரிவை உயர்த்தவும் வேண்டிய சந்தர்ப்பத்தில், வரவு செலவுத் திட்டத்தின் விரிவுப் பாதிப்பை குறைப்பதற்கும் வேண்டியதாக இருந்தது.

### 1960–61க்கான வரவு செலவுத் திட்டம்—மதிப்பீடுகள்

பாராளுமன்றம் அங்கீகரித்தபடி, 1960–61க்கான வரவு செலவுத் திட்டம், 1959–60ம் ஆண்டின் உண்மையான செலவீட்டிற் பார்க்க, மொத்தச் செலவை 1400 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்க ஏற்பாடு செய்தது. இந்த ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதிலும், இவ்வரவு செலவுத் திட்டம் பணக் குறையைக் குறைப்பதற்கும் நாணய விரிவைக் கொண்டுவரும் ஆதாரங்களிலிருந்து நிதியை எடுப்பதை ஏறக்குறைய முற்றாக ஒழிப்பதற்கும் திட்டமிட்டது. அரசிறைப் பகுதியில் எடுக்கப்படும் கணிசமான முயற்சி மூலமும் வங்கிகளற்ற கடன்பாடு, அந்நிய உதவி மூலமும், தான் 1960–61க்கான வரவு செலவுத் திட்டம் அரசாங்க நிதியியக்கத்தின் விரிவுப்பாதிப்பைத் தடுக்க முக்கியமாக நாடியது. 1959–60ல் 14040 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய மொத்த அரசிறையை, 1960–61ல் 16340 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்த்துவதை அரசிறை நிகழ்ச்சித் திட்டம் நோக்கமாகக் கொண்டது. இது ஒரு ஆண்டில் 2300 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பை அல்லது 16 சதவீத அதிகரிப்பைக் குறிக்கும். உள்நாட்டு கடன்பாட்டுத் திட்டம் 2400 இலட்சம் ரூபாய்களைப் பெறுவதைக் குறிக்கோளாக கொண்டு விளங்கியது. 1959–60ல் வங்கிகளற்ற ஆதாரங்களிலிருந்து பெற்ற கடன்களாகிய 1412 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்க 988 இலட்சம் ரூபாய்கள் கூடியது. அதே நேரத்தில் அந்நிய உதவி மூலம் கிடைக்கும் வரவுகள் 1000 இலட்சம் ரூபாய்களென மதிப்பிடப்பட்டது. 1959–60ல் அந்நிய உதவி 386 இலட்சம் ரூபாய்களாக இருந்தன.

---

(1) 13 இலட்சம் ரூபாய்கள் கொண்ட முற்பணக் கணக்குகளின் பேரில் ஏற்பட்ட இயக்கங்களின் பேரில் செய்யப்பட்ட நிகரக் கொடுப்பனவுகளையும், ஆழ்நிதிக்கு உதவிய தொகைகளையும், ஏட்டுச் சீரமைப்புக்களையும், மகாவங்கியிலிருந்து பெற்ற ஓர் விசேடக் கடன் மூலம் சர்வதேச நாணய நிதிக்கு ஈட்டப்பட்ட ஒப்பப்பணமாகிய 370 இலட்சம் ரூபாய்களையும் விலக்கியவை.

அரசிறை சம்பந்தப்பட்டவரை, உத்தேசிக்கப்பட்ட அதிகரிப்பாகிய 2300 இலட்சம் ரூபாய்களில், 1070 இலட்சம் ரூபாய்கள், இறக்குமதித் தீர்வைகள் வருமானவரி, தனிப்பட்ட வரிகள், 1960ம் ஆண்டு ஆவணி மாதம் தீவிரமாக உயர்த்தப்பட்ட இறக்குமதித் தீர்வைகள், முதலியனவற்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்டது. மறுபக்கத்தில் மொத்த அரசிறை அதிகரிப்பில் 1230 இலட்சம் ரூபாய்கள், 1960–61ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் புகுத்திய பல புதிய வரிகளிலிருந்து கிடைக்கும் என மதிப்பிடப்பட்டது. வருமானவ்ரியின் பேரில் ஓர் மேலதிகக் கட்டணமும் விதிக்கப்பட்டது. இது 300 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வருமானத்தையளிக்கும் என மதிப்பிடப்பட்டது. அத்துடன் 150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வருமானத்தை அளிக்குமென மதிப்பிடப்பட்ட ஒரு நிலவரியும் புகுத்தப்பட்டது. மேலும் 500 இலட்சம் ரூபாய்கள், 100 இலட்சம் ரூபாய்கள், 30 இலட்சம் ரூபாய்கள், 150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வருமானங்களை முறையே அளிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட வியாபாரப் பெயர் பதிவுவரி, பங்கு முதல்வரி, உயர்த்தொழில் ஆற்றுவோர் வரி, விசாவரி முதலியனவும் விதிக்கப்பட்டன. புதிய வரிகள் மூலம் கிடைக்கும் என இதுவரையில் திட்டமிடப்பட்ட வருமானத்தில் ஆகப் பெரிய அதிகரிப்பாக மேற்கூறிய மதிப்பிடப்பட்ட வரவுகள் மொத்த விளங்குகின்றது.

மேலே விவரிக்கப்பட்ட பல நடவடிக்கைகள் 1959–60ல் காணப்பட்ட வரவு செலவுத்திட்டக் குறைவாகிய 4510 இலட்சம் ரூபாய்களுடன் (1) ஒப்பிடுகையில், அரசாங்கத்தின் மொத்த வரவு செலவுத் திட்டக் குறைவை, 1960–61ல் 3400 இலட்சம் ரூபாய்களுக்குக் குறைக்கும் என மதிப்பிடப்பட்டது. மேலும் 1959–60ல் விரிவைக் கொண்டுவரும் நிதியீட்டத்தின் அளவு 2570 இலட்சம் ரூபாய்களாக விளங்கு கையில், 1960–61ல் விரிவைக் கொண்டுவரும் நிதி ஆதாரங்களை நாடவேண்டிய தேவையின்றி, அந்நிய கடன்பாடு மூலமும் வங்கிகள் அல்லாத உள்நாட்டு கடன்பாடு மூலமும் தான் குறை முழுவதும் நிரப்பப்படுமென கருதப்பட்டது. 1961ம் ஆண்டு தை மாதம், வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அநேக வகை இறக்குமதிகளின் பேரில் 5 சதவீத மேலதிகக் கட்டண விதிப்பு மூலமும், முன்னர் குறிப்பிடப்பட்ட நடைமுறைச் செலவுகளின் பேரில் கொண்டுவரப்பட்ட 10 சதவீத வெட்டு மூலமும், வரவு செலவுத்திட்ட நிலைமையை மேலும் பலமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 1960–61க்கான வரவு செலவுத் திட்டம்—தேறுமானம்

ஆயினும், இறுதித் தேறுமானத்தில் 1960–61க்கான வரவு செலவுத்திட்டத்தின் விளைவு பெரும்பாலும் மேலே காட்டப்பட்டபடியுள்ள மதிப்பீடுகளிலிருந்தும், எதிர்ப்பார்த்தனவற்றிலிருந்தும், வேறுபட்டே விளங்குகின்றது.

1960–61க்கான நிகரப் பணக்குறை இறுதியில் 4543 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இத்தொகையில் 2414 இலட்சம் ரூபாய்களும் விரிவைக் கொண்டுவரும் நிதி ஆதாரங்களிலிருந்து, அதாவது வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் மூலமாகவே, ஈட்டப்பட்டது. ஐக்கிய அமெரிக்க உதவியின் பயனுக எழுந்த உள்நாட்டு நிதிகளில் ஏற்பட்ட 75 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்கை நீக்கியபின்னர், வரவு செலவுத் திட்டம் கொண்டுவந்த விரிவுப் பாதிப்பு 2339 இலட்சம் ரூபாய்களாகும். இந்த எண்தொகைகள், 1959–60க்கான வரவு செலவுத் திட்டத்தில் காணப்பட்ட பணக்குறையாகிய 4178 இலட்சம் ரூபாய்களுடனும், நிகர விரிவுப் பாதிப்பாகிய 2511 இலட்சம் ரூபாய்களுடனும் ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. இறுதிப் பொறுப்பேற்பில் 1960–61ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் விரிவுப் பயன் முந்திய ஆண்டின் வரவு செலவுத்திட்ட விரிவுப் பயனிலிருந்து குறிப்பிடும்படியாக வித்தியாசப்பட்டிருக்கவில்லையென மேற்கூறிய எண்தொகைள் காட்டுகின்றன.

வரவு செலவுத் திட்டத்தின் இறுதித்தேறுமானத்திற்கும் ஆரம்ப மதிப்பீடுகளுக்கும் இடையே காணப்பட்ட வித்தியாசத்திற்கு பல காரணங்கள் பொறுப்பாக விளங்கின. மொத்தச் செலவு மதிப்பீடுகள் ஏறக்குறைய தேறப்பட்டன. உண்மையாக ஏற்பட்ட மொத்தச் செலவுகள் 19682 இலட்சம் ரூபாய்களாக விளங்கின.

---

(1) மொத்த வரவு செலவுத் திட்டக்குறை, நிகர பணக்குறையிலிருந்து ஆழ்நிதி உதவுத்தொகையளவிற்கு வித்தியாசப்படுகின்றது. நிகரப் பணக்குறை ஆழ்நிதி உதவுத் தொகையை நீக்கியுள்ளது. முன்னர் கூறியபடி, 1959-60க்கான நிகரப் பணக்குறை 4170 இலட்சம் ரூபாய்களாகும்.

இது மூலமதிப்பீட்டிலிருந்து ஆக 81 இலட்சம் ரூபாய்களால் மட்டும் கூடியுள்ளது. முந்தைய ஆண்டுகளில் காணப்பட்ட ஒரு போக்கிற்கு இது வேறுபட்டதாக இருக்கின்றது. கடந்த ஆண்டுகளில் உண்மையாக ஏற்பட்ட மொத்தச் செலவுகள் எப்பொழுதும் மூல மதிப்பீடுகளிலும் பார்க்க மேலதிகமாக விளங்கி வரவு செலவுத் திட்டக்குறை சம்பந்தப்பட்ட வரையில் எதிர்பார்த்தனவற்றிற்கும் தேறுமானத்திற்கும் இடையே ஏற்பட்ட வித்தியாசத்திற்கு முக்கிய காரணங்களிலொன்றாக இருந்தது. ஆயினும் 1960–61ல் முன்னரே குறிப்பிட்டபடி முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செலவு மதிப்பீடுகள், மொத்தச் செலவீடுகளில் ஓர் குறிப்பிடும்படியான அதிகரிப்புக்கு ஏற்பாடு செய்தன.

வரவுகளைப் பொறுத்த வரையில் தான் மதிப்பீடுகளுக்கும் இறுதிப் பெறுபேறுகளுக்கும் இடையே கணிசமான வித்தியாசம் காணப்பட்டது. இந்த வித்தியாசம் பிரதானமாக அரசிறைச் சேகரிப்புக்களிலும் அந்நிய உதவி, கடன்பாடு ஆகியனவற்றிலும் காணப்பட்டது. 1960–61ல் மொத்த அரசிறை 15139 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. அவ்வாண்டு மூலமதிப்பீடுகளிலும் பார்க்க இது 1200 இலட்சம் ரூபாய்களாக தாழ்ந்தது ஆகும். 1960–61ம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட அந்நிய உதவி 1000 இலட்சம் ரூபாய்களாக இருக்க, உண்மையாக கிடைத்த உதவி 296 இலட்சம் ரூபாய்களாகும். இது 837 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறைவாகும். அத்துடன் வங்கிகள் அல்லாத ஆதாரங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுக் கடன்களின் மதிப்பீடுகளிலும் குறைவு ஏற்பட்டது. 1960–61ல் அத்தகைய கடன்களின் மொத்தம் 1990 இலட்சம் ரூபாய்களாக (1) விளங்கிற்று. இவற்றின் மதிப்பீடுகளோ 400 இலட்சம் ரூபாய்களாக இருந்தன.

1960–61ல் தேறிய அரசிறை, மூலமதிப்பீட்டுத் தொகையிற் பார்க்க குறைவாக விளங்கியதெனினும், முந்திய ஆண்டின் வருமானத்திற் பார்க்க கணிசமான அளவில் மேலதிகமாக விளங்கிற்று. ஏற்றுமதி விலைகளில் மந்தம் ஏற்பட்ட பொழுதிலும், அரசிறை 1959–60ம் ஆண்டு மட்டத்திலும் பார்க்க 1100 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. இந்த அதிகரிப்புத் தொகை, 1960–61ம் ஆண்டில் அரசிறையை உயர்த்த எடுத்த தீவிர முயற்சிகளை எடுத்துக் காட்டுகின்றது. செலவு மிக உயர்ந்த அளவாக விளங்குகின்ற பொழுது (வரவு செலவுத் திட்டக்) குறையை குறைப்பதைக் குறிக்கோளாக கொண்டு வரவு செலவுத்திட்டம் ஆக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் திட்டமிடப்பட்டதற்கேற்ப அரசிறை கிடைக்காமற் போனதுதான், கவனத்திற்குரிய விடயமாகும்.

மூலமதிப்பீட்டிலும் பார்க்க பிரதானமாக இருவகை வருவாய்களிலேயே மொத்த அரசிறை சேகரிப்புக்கள் 1960–61ல் குறைந்து காணப்பட்டன. அவையாவன, ஏற்றுமதித் தீர்வை வருமானங்களும், அவ்வாண்டு புகுத்தப்பட்ட புதிய வரிகளிலிருந்து கிடைத்த வருமானங்களும் ஆகும். இறக்குமதித் தீர்வை, வருமானவரி, வருமானவரியின் பேரில் உள்ள மேலதிகக் கட்டணம் ஆகியனவற்றிலிருந்து கிடைத்த வருவாய்கள் ஏறக்குறைய மூலமதிப்பீடுகளுடன் ஒத்திருந்தன; சில வேளைகளில் மூல மதிப்பீடுகளுக்கு மேலதிகமாகவும் விளங்கின. உதாரணமாக மேலதிகக்கட்டணம் தவிர்ந்த வருமானவரியிலிருந்து கிடைத்த அரசிறை, மூலமதிப்பீட்டிற் பார்க்க 248 இலட்சம் ரூபாய்களால் அதிகமாகவும், முந்தைய ஆண்டின் சேகரிப்புக்களிற் பார்க்க 403 இலட்சம் ரூபாய்கள் கூடியதாகவும் விளங்கிற்று. இது, முந்தைய ஆண்டின் ஏற்றுமதித் துறையிலும், உள்நாட்டுத் துறையிலும் காணப்பட்ட கூடிய வருமான மட்டங்களை பிரதிபலிக்கின்றது. தனிப்பட்ட வரிகளிலிருந்து (செல்வ–வரி, செலவு வரி, நன்கொடைவரி, ஆகியனவற்றிலிருந்து) சேகரிக்கப்பட்ட அரசிறை 118 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இது மூலமதிப்பீடாகிய 190 இலட்சம் ரூபாய்களிலிருந்து குறைந்து காணப்படுகின்றது. ஆயினும் 1959–60ல் சேகரிக்கப்பட்ட 12 இலட்சம் ரூபாய்களிலிருந்து இது கணிசமான அளவில் உயர்ந்தே விளங்குகின்றது.

இரப்பரின் ஏற்றுமதித் தீர்வையிலிருந்து கிடைத்த வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே, ஏற்றுமதி வருவாய்கள் மதிப்பிட்டதிலும் பார்க்க குறைந்து காணப்பட்டமைக்கு பிரதான காரணமாக விளங்கிற்று. மூலமதிப்பீட்டிலும் பார்க்க இவை 336 இலட்சம் ரூபாய்கள் குறைந்து காணப்பட்டன. 1960, கார்த்திகை மாதத்திலும் 1961 மாசி மாதத்திலும் தீர்வை விகிதம் முறையே ஒரு இறுத்தலுக்கு 8 சதங்களாலும், 10 சதங்களாலும் குறைக்கப்பட்டதாலும், முந்தைய பகுதியில் காட்டப்

---

(1) வழக்கமாகப் பணச்சந்தையில் முதலீடு செய்யப்படும் அரசகரும முகவர் நிலையங்களினது நிதிகளிடமிருந்து இறைசேரி நேரடியாகப் பெற்ற கடன்பாட்டையும் உள்ளடக்கும்.

பட்டபடி ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு குறைந்தமையாலுமே, இரப்பரின் ஏற்றுமதித் தீர்வை வருவாய்களில் வீழ்ச்சியேற்பட்டது. தெங்குப் பொருள் ஏற்றுமதித் தீர்வை வருவாய்களும் மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 32 இலட்சம் ரூபாய்களால் ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்தன. ஆனால் இதைப் பொறுத்த வரையில், 1961ம் ஆண்டு வைகாசியில் தெங்குப் பொருட்களின் பேரில் உள்ள ஏற்றுமதித் தீர்வை குறைப்புகளை, ஏற்றுமதியளவில் ஏற்பட்ட தீவிரமான அதிகரிப்பு ஈடுசெய்தது.

புதிய வரிகளிலிருந்து வரும் வருவாய்கள் சம்பந்தப்பட்டவரையில் தான், மதிப்பீடுகளிலும் பார்க்க உண்மையாக கிடைத்தனவற்றில் ஏற்பட்ட குறைவு மிகவும் பாரதூரமாக விளங்கிற்று. வருமானவரியின் பேரில் உள்ள மேலதிக கட்டணத்திலிருந்து கிடைத்த வருவாய்களான 289 இலட்சம் ரூபாய்கள் ஏறக்குறைய மூலமதிப்பீட்டுடன் ஒத்திருந்தது. ஆனால் இதர வரிகளிலிருந்து கிடைத்தவை மூலமதிப்பீடாகிய 930 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 171 இலட்சம் ரூபாய்களாக மட்டும் விளங்கின. புதிய வரிகளில் ஆகப் பெரியதாக விளங்கும் வியாபாரப் பெயர் பதிவு வரி 500 இலட்சம் ரூபாய்களைச் சேர்க்கும் என மதிப்பிடப்பட்டிருக்க, உண்மையாக 33 இலட்சம் ரூபாய்களே சேர்ந்தது. புதிய வரிகள் எவ்வளவு வருவாய்களை சேர்க்கும் என்பதை சரியாக மதிப்பிடுதல் சிக்கலான பிரச்சனையாகும். அத்துடன் இப்புதுவரிகள் சம்பந்தமான சட்டவாக்கங்கள் தாமதிக்கப்பட்டமையால், மதிப்பிட்டபடி வருவாய்களை சேகரிக்க முடியவில்லை. ஆகவே தான் மதிப்பீடுகளுக்கும் உண்மை சேகரிப்புகளுக்கும் இடையே வித்தியாசம் காணப்பட்டது. ஆடி மாதம் பிற்பகுதியில் அரசாங்கம் அமைக்கப்பட்டமையால், வழக்கமாக ஆடியில் புகுத்தப்படும் வரவு செலவுத்திட்டம்கூட புரட்டாதியில் தான் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் புதியவரிகள் சம்பந்தப்பட்ட சில சட்டவாக்கங்கள் நிதியாண்டின் பிற்பகுதியிலேதான் முடிவாக்கப்பட்டன.

1959–60ம் ஆண்டின் வருவாய்களுடனும், 1960–61ம் ஆண்டின் வரிவருவாய் மதிப்பீடுகளுடனும் ஒப்பிடுகையில் 1960–61ம் ஆண்டின் வரிவருவாய்களில் ஏற்பட்ட மாற்றங்களை பின்வரும் அட்டவணை சுருக்கித் தருகின்றது. இவ்வரிகளிலிருந்து பெறப்பட்ட ஒப்பியல் அரசிறை மொத்தங்கள் 95ம் பக்கத்திலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை I—4**

அரசிறையில் காணப்பட்ட மேலதிகமும் (+) குறைவும் (—)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1959/60-ல் இருந்து 1960/61-ல் ஏற்படும் என மதிப்பிடப் பட்ட அதிகரிப்பு | 1959/60-ல் இருந்து 1960/61-ல் உண்மையாக ஏற்பட்ட அதிகரிப்பு | 1960/61-ம் ஆண்டு மதிப் பீடுகளில் இருந்து உண்மை யாகக் கிடைத் தனவற்றில் ஏற்பட்ட மேல திகம் (+) அல் லது (—) குறைவு |
|---|---|---|---|
| 1. ஏற்றுமதித் தீர்வைகளில் (தேயிலை வரி உட்பட) .. | + 10.5 | – 23.7 | – 34.1 |
| 2. இறக்குமதித் தீர்வைகள் .. .. .. | + 24.4 | + 28.8 | + 4.4 |
| 3. வருமானவரி (மேலதிகக் கட்டணம் உட்பட) .. | + 15.5 | + 40.4 | + 24.9 |
| 4. தனிப்பட்ட வரிகள் .. .. .. | + 17.8 | + 10.6 | – 7.2 |
| 5. 1960/61 வரவு செலவுத் திட்டம் விதித்த புதிய வரிகள் .. .. .. .. | | | |
| (அ) வருமான வரியின் பேரில் உள்ள மேலதிகக் கட்டணம் .. .. .. | + 30.0 | + 28.9 | – 1.1 |
| (ஆ) புதிய வரிகள் .. .. .. | + 93.1 | + 17.0 | – 76.1 |
| 6. **இதர அரசிறை விடயங்கள்** .. .. .. | + 38.8 | + 8.1 | – 30.8 |
| **மொத்தம்** .. .. .. | + 230.1 | + 110.1 | – 120.0 |

மேற்கூறிய பரிசீலனைகளிலிருந்து, தோன்றிய நிலைமையை சுருக்கமாக எடுத்துக் கூறலாம். 1960–61க்கான வரவு செலவுத் திட்டம், 1959–60ல் கிடைத்த அரசிறை யிலும் பார்க்க 2300 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அரசிறை அதிகரிப்பிற்காக ஏற் பாடுகளை வகுத்தது. இந்த அதிகரிப்பில் 46 சதவீதம், அரசிறையமைப்பில் ஏற்கன வே ஒரு பகுதியாக உள்ள விடயங்களிலிருந்து கிடைக்கவும், 13 சதவீதம் வருமான வரியின் பேரில் உள்ள மேலதிகக் கட்டணத்திலிருந்து கிடைக்கவும், 41 சதவீதம் பல புதிய வரிகள் மூலமாகக் கிடைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டது. இறுதியில், உண் மையாகச் சேர்க்கப்பட்ட அரசிறை 1100 இலட்சம் ரூபாய்களால் உயர்ந்தது. இதில் 58 சதவீதம் வழக்கமான அரசிறை ஆதாரங்களிலிருந்தும் 26 சதவீதம் மேலதிகக் கட்டணத்திலிருந்தும், 15 சதவீதம் முதன்முதலாகப் புகுத்தப்பட்ட புதிய வரிகளி லிருந்தும் கிடைத்தன. இந்த எண்தொகைகள் எதிர்பார்க்கப்பட்டனவற்றிற்கும் இடையே உண்டான வித்தியாசத்தை எடுத்துக் காட்டுகின்றன. அத்துடன் அவை, கிடைக்கக்கூடிய அரசிரையின் உண்மையான மதிப்பீட்டைக் கணிப்பதில் ஏற்பட்ட கஷ்டங்களை விளக்குவதற்கு உதவுகின்றன.

வரவு செலவுத்திட்ட தேறுமானம் சம்பந்தமான மற்ற முக்கிய அம்சம் மதிப் பீடுகளிலும் பார்க்க 837 இலட்சம் ரூபாய்களால் குறைந்த அந்நிய உதவியும், கடன் பாடுகளும் ஆகும். கடந்த சில ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டங்கள் ஆரம்பத் தில் (வரவு செலவுத்திட்டக்) குறை நிவர்த்திப்பதற்காக அந்நிய உதவியையும் கடன்பாடுகளையும் கணிசமாகப் பெறுவதற்கான ஏற்பாடுகளை, வீக்கத்தைக் கொண்டு வராத நிதி ஆதாரம் என்பதற்காக ஆக்கின. ஆயினும் இவ்வாதாரங்களி லிருந்து உண்மையாகக் கிடைத்த வரவுகளோ, ஆரம்பத்தில் எதிர்பார்த்ததிலும் பார்க்கக் கணிசமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டுள்ளன.

உண்மையாக முடிவாக்கப்பட்ட அந்நிய உதவியை அடிப்படையாகக் கொண்டு வரவுகளின் ஆரம்ப மதிப்பீடுகள் கணிக்கப்பட்டிருந்தால், மதிப்பீடுகளுக்கும் உண் மையாக கிடைத்தனவற்றிற்கும் இடையே ஏற்படும் வித்தியாசத்திற்கு ஒரு முக்கிய காரணம் இருக்க இடமுண்டு. சில திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. அதற்காக உண்மையாக ஏற்பட்ட செலவீடுகள் மதிப்பிட்ட தொ கையிற் பார்க்க குறைந்திருக்கவும் கூடும். இக்குறித்த சில திட்டங்களுக்காக நன் கொடை ரூபத்திலும், கடன்கள் ரூபத்திலும், அந்நிய உதவியை பெறுவதற்கு ஏற் பாடுகள் முடிவாக்கப் பட்டிருப்பின், அவ்வாண்டிலேயே அவ்வுதவித் தொகைகள் அனைத்தும் கிடைக்காமற் போகக்கூடும். மேற்கூறிய திட்டநிறைவேற்றக் காலதா மதங்கள் செலவுப் பகுதியில் சேமிப்புகளை விளைவிக்கின்றதெனினும், இதர பகுதிக ளில் ஏற்படும் செலவீட்டு அதிகரிப்புக்கள் அநேகமாக இச்சேமிப்புகளை ஈடுசெய்யும் வகையில் அமைந்துள்ளன. அத்துடன் வேறொரு குறிப்பும் இங்கே கவனிக்கதற் குரியது. ஐக்கிய அமெரிக்க பொதுசனச் சட்டம் 480ல் இருந்து எழும் உள்நாட்டு ரூபா நிதியிலிருந்து கிடைக்கும் கடன்களும் கொடைகளும், அரசாங்கச் செலவுக ளுக்கு நிதி ஆதாரங்களாக விளங்கிய பொழுதிலும், நாணய விரிவைக்கொண்டு வரு கின்றன. ஏனெனில் அவை அந்நியச் செலாவணியின் சேர்க்கைகளை ஈடுசெய்யமாட் டாது. பொதுசனச் சட்டம் 480 கொடுக்கல் வாங்கல்களின் மூலம் அந்நிய செலா வணிச் சேமிப்பு, ரூபா கொடுப்பனவுகளைச் செய்து இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவை வாங்கிய ஆரம்பக் கட்டத்தில் ஏற்படுகின்றது. ஆகவே மேற் கூறிய ஆதாரங்களிலிருந்து, வரவு செலவுத்திட்டக் குறைக்காக நிதியீட்டல், (வரவு செலவுத்திட்டக்) குறையின் விரிவுப் பாதிப்பை குறைக்கமாட்டாது.

இந்த அவதானங்களும், முன்னரே கூறிய சில அவதானங்களும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் காணப்படும் அந்நிய உதவி, கடன்பாடு ஆகிய அம்சங் களின் வரவு செலவை மிகவும் கடுமையாக மட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றன. விரிந்து செல்லும் அபிவிருத்தித் திட்டம் உள்ள ஓர் சந்தர்ப் பத்தில், இவ்விடயம் வளருகின்ற ஓர் முக்கியத்துவத்தைப் பெறுகின்றமையால், மேற்குறித்த மட்டுப்படுத்தல் குறிப்பாக அத்தியாவசியமாகின்றது. மதிப்பீடுகளி லும். பார்க்க உண்மையாகக் கிடைத்த அரசிறையிலும், அந்நிய உதவியிலும் ஏற் பட்ட குறைவுகள், 4890 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்த வரவு செலவுத் திட்டக் குறையை இறுதியில் விளைவித்தன. அத்துடன் விரிவைக் கொண்டுவரும் ஆதாரங்களிலிருந்து, 2339 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பெரிய அளவு நிதியீட்

22627
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department

டத்தையும் விளைவித்தன. கீழ்வரும் அட்டவணையில் இது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் 1959–60லும், 1960–61லும் குறைகளுக்கான நிட்யீட்டத்தினது முறைகளின் ஒப்பியல்ச் சுருக்கத்தையும் இவ்வட்டவணை தருகின்றது.

அட்டவணை I—5

குறை நிவர்த்திப்பிற்கான நிதியீட்டம்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 1959—60 | 1960—61 |
|---|---|---|
| 1. வங்கிகளற்ற ஆதாரங்களிலிருந்து வந்த நிதியீட்டம் .. | | |
| (அ) நிருவாகக் கடன்பாடு (1) .. .. .. | 11·4 | 32·5 |
| (ஆ) வங்கிகளற்ற ஆதாரங்களிலிருந்து பெற்ற உள்நாட்டு பணச் சந்தைக் கடன்பாடு .. .. .. | 163 | 199 |
| (இ) அந்நிய கடன்பாடு .. .. .. | 29·3 | 16·3 |
| 2. வங்கிகளிடமிருந்து பெற்ற உள்நாட்டுக் கடன்பாடு .. | 241·1 | 241·4 |
| 3. அரசாங்க பணமீதிகளின் பாவிப்பு .. .. .. | 6·0 | — |
| 4. மொத்த வரவு செலவுத் திட்டக்குறை .. .. | 451 | 489 |
| 5. ஐக்கிய அமெரிக்க உதவியிலிருந்து எழுந்து உள்நாட்டு நிதிக் கணக்கில் ஏற்பட்ட மாற்றத்திற்காக செய்யப்பட்ட சீரமைப்பு .. .. .. .. | 4·0 | 7·5 |
| 6. வரவு செலவுத் திட்டத்தின் நிகர விரிவுப் பாதிப்பு (விடயங்கள் 2, 3, 5) .. .. .. .. | 251·1 | 233·3 |

குறிப்பு: (1) வழக்கமாகப் பணச்சந்தையில் முதலீடு செய்யப்படும் அரசகரும நிலையங்களினது நிதிகளிடமிருந்து இறைசேரி நேரடியாகப் பெற்ற கடன்பாட்டிற்காகச் செய்யப்பட்ட சீரமைப்பிற்கேற்ப.

மேலேயுள்ள எண்தொகைகள் காட்டுகின்றபடி, வங்கிகள் அல்லாத இதர உள்நாட்டு ஆதாரங்களிலிருந்து 1960–61ல் பெற்ற கடன்பாட்டில் முந்தைய ஆண்டுகளிலும் பார்க்க ஏறக்குறைய 360 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அதிகரிப்பு காணப்பட்ட பொழுதிலும், வரவு செலவுத்திட்டக்குறைக்காக நிதியீட்டுவதற்கு வங்கிகளிடமிருந்து கடன்படும் தேவையைக் குறைப்பதற்கு மேற்கூறிய அதிகரிப்புப் போதியதாக இருக்கவில்லை. கடந்த சில ஆண்டுகளைப் போல, வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடன்படுவதற்கு முக்கிய ஆதாரமாக மகாவங்கி விளங்கிற்று. 1960–61–ல் மகாவங்கியிடமிருந்து பெற்ற கடன்களின் தொகை 2056 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. அதே நேரத்தில், சென்ற சில ஆண்டுகளில் மிகச் சிறியளவாகவே விளங்கிய அரசாங்கத்திற்கு வர்த்தக வங்கிகள் கொடுத்த கடன்கள் 371 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன.

இவ்வாண்டும், வங்கிகளிடமிருந்து அரசாங்கம் கடன்படுவதற்கு இறைசேரி உண்டியலே முக்கிய கருவியாக விளங்கிற்று. 1960–61ல் இறைசேரி உண்டியல் நிலுவைகள் 2000 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. 1961ம் ஆண்டு ஆனியில், இறைசேரி உண்டியல்களின் பேரில் உள்ள சட்டபூர்வமான எல்லையை 6500 இலட்சம் ரூபாய்களிலிருந்து 7500 இலட்சம் ரூபாய்களுக்குப் பாராளுமன்றம் உயர்த்த வேண்டியிருந்தது. 1961, புரட்டாதி முடிவில் இறைசேரி உண்டியல்கள் நிலுவைகளில் மொத்தம், இதன்மேல் எல்லையாகிய 7500 இலட்சம் ரூபாய்களிலிருந்தது. அதே திகதியில் மகாவங்கியினது இறைசேரி உண்டியல் உடமைகளின் தொகை 6806 இலட்சம் ரூபாய்களை கொண்டதாக விளங்கிற்று.

## 1961–62க்கான வரவு செலவுத்திட்டம்

1960–61ம் நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டம் சம்பந்தமாகவே இவ்வறிக்கையில் இதுவரை பரிசீலனை செய்யப்பட்டது. ஆயினும் முன்னர் கூறியபடி, 1961ம் பஞ்சாங்க ஆண்டின் கடைசிக் காற்பகுதி, நடப்பு நிதியாண்டாகிய 1961–62ன்

கீழ் அடங்குகின்றது. அரசிறை, செலவு பற்றிய முடிவான தொகைகள் கிடையாவிடினும், 1961–62க்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளும், அரசாங்க இயக்கங்கள் சம்பந்தமான தரவுகளும், இக்காலத்தின் வளர்ச்சிப் போக்கைப் பெரும்படியாக எடுத்துக்காட்டப் போதியதாக விளங்குகின்றன.

பாராளுமன்றம் அங்கீகரித்தபடியுள்ள 1961–62 வரவு செலவுத் திட்டம், 1960–61க்கான வரவு செலவுத்திட்டத்தைப் போலவே, வரவு செலவுத்திட்டக் குறையை கணிசமாக குறைப்பதற்கும், விரிவைக் கொண்டு வரும் நிதி ஆதாரங்களின் தேவையை நீக்குவதற்கும் நாடியது.

இந்த வரவு செலவுத்திட்டம் மீண்டும் வரும் செலவீடுகளின் 2½ சத வீதத்தைக் கொண்ட குறைவுச் செலவிற்கும், வரவு செலவுதிட்ட மூலதனச் செலவீடுகளின் 15 சதவீதத்தைக் கொண்ட குறைவுச் செலவிற்கும் இடம்விட்டபின்னர், 21061 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்தச் செலவிற்கு ஏற்பாடு செய்தது. 1960–61ல் உண்மையாக ஏற்பட்ட மொத்தச் செலவாகிய 19680 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்க இது 1380 இலட்சம் ரூபாய்களால் கூடியுள்ளது. 1960–61ன் உண்மையான மூலதனச் செலவீடுகளிலும் பார்க்க 1340 இலட்சம் ரூபாய்களால் மேலதிகமாக விளங்கும் மூலதன செலவீடுகளே அநேகமாக மொத்தச் செலவில் உண்டான அதிகரிப்பிற்கு முற்றும் காரணமாக விளங்கின. ஆழ்நிதி உதவித்தொகைகளை தவிர்ந்த நடைமுறைச் செலவிற்கான ஏற்பாடு, முந்தைய ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட மூலதன செலவீட்டிலும் பார்க்க 300 இலட்சம் ரூபாய்களால் குறைந்துள்ளது. இதற்கு, குறைந்த உணவு மான்ய மதிப்பீடுகளே பெரும்பாலும் காரணமாக விளங்குகின்றன. மதிப்பிடப்பட்ட 17767 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட அரசிறையைச் சேகரிப்பதையும் இந்த வரவு செலவுத் திட்டம் இலக்காகக் கொண்டது. இம் மதிப்பீட்டுத் தொகை 1960–61ல் உண்மையாக சேகரிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 2628 இலட்சம் ரூபாய்களால் அல்லது 15 சதவீதத்தால் கூடியதாகும். இந்த அடிப்படையில், மொத்த வரவு செலவுத் திட்டக்குறை 3294 இலட்சம் ரூபாய்களாக விளங்கும். உள்நாட்டு பணச் சந்தைக் கடன்பாடு மூலம் வரும் என மதிப்பிடப்பட்ட 2000 இலட்சம் ரூபாய்களைக் கொண்டும், அந்நிய உதவியிலிருந்து வரும் என மதிப்பிடப்பட்ட 1400 இலட்சம் ரூபாய்களைக் கொண்டும் இக்குறையை நிரப்புவதற்கென எதிர்பார்க்கப்பட்டது.

1961–62க்கான அரசிறை இலக்குத் தொகையை அடைவதற்கு, வரிவிதிப்புகள் சம்பந்தமாகவே மேன்மேலும் புதிய, திடமான முயற்சிகள் எடுக்கவேண்டியதாயிற்று. மதிப்பிடப்பட்ட அரசிறை அதிகரிப்பில் கிட்டத்தட்ட 1750 இலட்சம் ரூபாய்களைக் கூடுதலான வரி நடவடிக்கைகள் மூலம், (புதிய பல வரிகளும் உட்பட) சேகரிக்க எதிர்பார்க்கப்பட்டது. இப்புதிய வரி நடவடிக்கைகள் பின்வருவனவற்றை கொண்டுள்ளன: ஒருவரின் மொத்த மாத வரும்படி 300 ரூபாய்களுக்கு மேலிருந்தால், அம்மொத்த வரும்படிமேல் விதிக்கப்பட்ட 4 சதவீத தேசிய அபிவிருத்தி வரி—இவ்வரி 250 இலட்சம் ரூபாய்களைச் சேகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது; வியாபாரப் பெயர் பதிவு வரிக்கும், உயர்த்தொழில் வரிக்கும் பதிலாக சொந்தத் தொழிலாற்றுவோர் மேல் விதிக்கப்பட்ட பதிவுவரி—இவ்வரி 367 இலட்சம் ரூபாய்களைச் சேகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது; 450 இலட்சம் ரூபாய்களைச் சேகரிக்கும் என மதிப்பிடப்பட்ட விற்பனவு வரி; 10 இலட்சம் ரூபாய்களைச் சேகரிக்கும் என மதிப்பிடப்பட்ட, குறித்த ஒரு எல்லைக்குமேல் உள்ள வருமானங்களின் பேரில் விதிக்கப்பட்ட 100 சதவீத மேலதிகவரி; முதலியன ஆகும். அத்துடன், மதுபானம், புகையிலை ஆகியனவற்றின் பேரில் கூடிய வரிகள் விதிக்கப்பட்டும், செல்வ வரி, நில வரி, வருமான வரி ஆகியனவற்றின் அடிப்படையும் பெரிதாக்கப்பட்டது.

1961–62 வரவு செலவுத் திட்டத்தின் தேறுமானத்தை சரியாக தற்பொழுது மதிப்பிடமுடியாது. தற்பொழுது கிடைக்கக்கூடிய சான்றுகள், மூலமதிப்பீட்டிலும் பார்க்க உண்மையாகக் கிடைக்கும் அரசிறை குறைந்தே காணப்படும் என்பதை குறிப்பாகக் கூறுகின்றன. தேயிலை, இரப்பர், ஆகியனவற்றின் உள்ள உலகச் சந்தையில் காணப்படும் மந்த நிலைமையால் ஏற்றுமதி தீர்வையிலிருந்து கிடைக்கும் வருவாய்கள் பிரதிகூலமாக பாதிக்கப்படக்கூடும். இறக்குமதித் தீர்வை வருவாய்களோ, இறக்குமதிகளின் பெறுமானத்திலும் அளவிலும் ஏற்படும் சுருக்கத்தின் காரணமாக வீழ்ச்சியடையக்கூடும். 450 இலட்சம் ரூபாய்களைச் சேர்க்கும் என மதிப்பிடப்

பட்ட விற்பனவு வரி, இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. மேலும் நிர்வாகப் பிரச்சனையிலும், வேறு காரணங்களும், இதரப் புதிய வரிகள் மூலம் கிடைக்ககூடிய அரசிறையை பாதிக்கவும் கூடும். அதே நேரத்தில் துணை ஏற்பாடு களால் மொத்தச் செலவுகள் அதிகரிக்கவும் கூடும். 1961, மார்கழியில் சீனியின் சில்லறை விலை குறைக்கப்பட்டமையாலும், இதர சில காரணங்களாலும் உணவு மான்யங்களுக்காக மதிப்பீட்டுச் செலவு கூடியதாக விளங்கும்போல இருக்கிறது. ஏற்கனவே முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களை கூடியவரையில் அடிப்படையாகக் கொண்டே, 1961–62 அந்நிய உதவி வரவுகள் மதிப்பிடப்பட்டன. ஆயினும் இவை குறித்த சில திட்டங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பட்சத்தில், இத்திட்டங்களி னது செலவுகளின் குறைவு இவ்வரவுகளை பாதிக்கும்.

இத்தகைய சகல காரணங்களால், 1961–62க்கான மொத்த வரவு செலவுத் திட் டக்குறை, எதிர்நோக்கப்பட்ட தொகைக்கும் மேலதிகமாக விளங்கும் போலவும், விரிவைக் கொண்டு வரும் நிதி ஆதாரங்களிலிருந்து நிதியீட்ட வேண்டிய தேவை யை இக்குறையின் அளவு உண்டாக்கும் போலவும், தற்போதைய அறிகுறிகள் எடுத் துக் காட்டுகின்றன.

1961ம் ஆண்டு, ஐப்பசி மாத ஆரம்பத்திற்கும், மார்கழி மாத முடிவிற்கு மிடையே, இறைசேரி உண்டியல் நிலுவைகளின் தொகை 250 இலட்சம் ரூபாய் களாலும், மகாவங்கியின் இறைசேரி உண்டியல் உடமைகளின் தொகை 130 இலட் சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. 1961 மார்கழி, 31ம் திகதியில் மகாவங்கியின் இறைசேரி உண்டியல் உடமைகளின் மொத்தம் 6936 இலட்சம் ரூபாய்களாக விளங் கிற்று. 1961 மார்கழியில் இறைசேரி உண்டியல்களின் சட்டப்பூர்வமான எல்லை மறுபடியும் பாராளுமன்றத்தால் 7500 ரூபாய்களிலிருந்து 10,000 இலட்சம் ரூபாய் களுக்கு உயர்த்தப்பட்டது.

வளங்கள் பற்றிய பிரச்சனை

அடுத்தடுத்த இரு வரவு செலவுத் திட்டங்களின் மூலம் வரவு செலவுத் திட்டக் குறையைச் சுருக்குவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தாலும், அரசாங்க நிதி இயக்கங்களின் விரிவுப் பாதிப்பு முந்தைய ஆண்டுகளிற் பார்க்க குறிப்பிடத்தக்க வகையில் குறைந்திருக்கவில்லை என்பதை சென்ற பகுதிகளில் உள்ள அரசாங்க நிதி இயக்கங்கள் பற்றிய பரிசீலனை எடுத்துக் காட்டுகின்றது. 1961ல் ஏற்பட்ட இலங் கையின் அனுபவம், அரசிறைப் பகுதியில் எழுகின்ற பிரச்சனைகள் எவ்வளவு பார தூரமானவை என்பதை விளக்கிக் காட்டுகின்றது. வருடம்தோறும் அபிவிருத்திச் செலவுகளை அரசாங்கம் அதிகரிக்கவேண்டிய நேரத்தில், இச்செலவுகளுக்காக நிதி யீட்டுவதற்குக் கிடைக்கக் கூடிய வளங்களைப் பெருக்குதல் அத்தியாவசியமாகின்றது.

பிரதிகூலமான விளைவுகளைக் கொண்டு வரும் விரிவு நிதியியக்கத்தைத் தவிர்க்க வேண்டுமாயின் வங்கியில் அல்லாத உள்நாட்டுக் கடன்பாடுகள், அந்நிய உதவி, நடைமுறைச் செலவுகளுக்கு மேலுள்ள அரசிறை மிகைகள் ஆகியனவற்றிலிருந்து தான் மேற்கூறிய வளங்கள் சேர்க்கப்படல் வேண்டும். எதிர்காலத்தில் உள்நாட் டுக் கடன்பாடு, அந்நிய உதவி, ஆகிய இரண்டின் அளவையும் அதிகரிப்பதற்கு கூடிய வாய்ப்புள்ளது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பொருளாதாரம் முழு வதும் ஏற்படும் வருமானங்களின் வளர்ச்சியுடனும், சேமநிதிகள், காப்புறுதி நிதிகள் போன்ற ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வரவுகளின் வளர்ச்சியுடனும் குடும்பச் சேமிப்புகளும், கூட்டுச் சேமிப்புகளும் அதிகரிக்கும். அது போலவே அபிவிருத்தித் துறையில் திட்டங்களும் ஏற்பாடுகளும் முற்றுப்பெறுகையில், வெளிநாடுகளிலிருந்து கடன்களைக் கூடப் பெறுவதற்கு வாய்ப்புத் தோன்றும். ஆயினும் கடந்த சில ஆண்டுகளின் அனுபவம், இந்த ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வரவுகள் மட்டும் அபிவிருத்திக்கான முழு நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குப் போதுமான தாக இருக்கமாட்டா எனக் காட்டுகின்றது. மேலும் இவ்வரவுகள் வரவு செலவுத் திட்ட நிலைமையில் வருடந்தோறும் மாறுகின்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற் காக இணங்கும் வகையில் அமைந்திருக்கவில்லை. அபிவிருத்திக்காக தேவைப்படும் நிதிக்கு, கூடுதலான ஓர் ஆதாரமாகவும், கணிசமான அளவை ஈட்டும் ஆதாரமாக வும், நடைமுறைச் செலவிற்கு மேலே அரசிறை மிகைகள் ஏற்படவேண்டியது மிக வும் அவசியமாகின்றது.

நடைமுறைக் கணக்கில் அரசிறை மிகைகளைப் பெறுவதற்கு, வருவாய்கள் உயர்த்தப்படல் வேண்டும், அல்லது நடைமுறைச் செலவுகள் குறைக்கப்படல் வேண்டும்; அல்லது இவ்விரு முறைகளும் கையாளப்படல் வேண்டும். இம்முறைகள் ஒவ்வொன்றிற்கும் தொடர்பான பல முக்கிய விடயங்கள் உள்ளன.

உதாரணமாக, கூடுதலான வருவாய்களைச் சேகரிக்க முற்படுகையில் பல பிரச்சனைகள் எழுகின்றன. முதலாவதாக, 1960–61, 1961–62ம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டங்களில் காணப்பட்டபடி, அரசிறையை அதிகரிக்கும் குறிக்கோள், சில புதிய வரிகளைப் புகுத்தவேண்டிய தேவையை உண்டாக்கக்கூடும். இந்த முயற்சியில் எப்பொழுதும் நிர்வாகப் பிரச்சனைகளும், சட்டவாக்கப் பிரச்சனைகளும் எதிர்ப்படுகின்றன. இவ்வாறு ஒரு தனி அதிகாரச் சட்டத்திலேயே புதிய வரி நடவடிக்கைகள் அனைத்தையும் அடக்குவதன் மூலம், சட்டவாக்கங்களில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு 1961–62 வரவு செலவுத் திட்டம் முயற்சித்தபொழுதிலும், செயற்படுத்தல், நிர்வாகம் ஆகியவற்றில் உள்ள கஷ்டங்கள் காரணமாக, மதிப்பிடப்பட்டதிலும் பார்க்க அரசிறை குறைந்து காணப்படும். வித்தியாசமான பல வரி நடவடிக்கைகளைத் தழுவும் முறையில் சட்டங்களை ஆக்குவதில் ஏற்படக்கூடிய கஷ்டங்களை தனியொரு நிதி அதிகாரச் சட்டம் தவிர்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவதாக, வரிகளினது அமைப்பின் உறுதியான தன்மையின்பேரில் அடுத்தடுத்து புகுத்தப்படும் புதியவரிகள் கொண்டுவரக்கூடிய விளைவுகள் ஓர் பிரச்சனையாக உள்ளன. 1958ம்ஆண்டில் வருமானம், செலவு ஆதனம் ஆகியவற்றின்பேரில் ஒருமைப்படுத்தப்பட்ட வரி முறைகளைப் புகுத்துவதன் மூலம் வரிகளினது அமைப்பின் அடிப்படை திருத்தப்பட்டது. ஆயினும் கூடுதலான அரசிறையின் அத்தியாவசியத் தேவைக்கேற்ப இந்த வரி முறைகள் பயனளிக்காதபடியால், குறிப்பாக ஆரம்பக் கட்டங்களில் துணை வரிகள் பலவற்றை மேலும் விதிக்க வேண்டியதாயிற்று. காலத்திற்குக் காலம் புதிய வரிகளை விதிக்கவேண்டிய தேவை எழுகின்ற நிலைமையில், செய்யப்பட்ட மாற்றங்களை ஓர் உறுதியான சமநிலைவாய்ந்த வகையில் பரிபூரணமாக்குவதற்கு வரிகளின் அமைப்பு முழுவதையும் அடிக்கடி திருப்பிப் பரிசீலனை செய்தல் விரும்பத்தக்கதாகும். அல்லாவிடில், பொருளாதாரத்தின் ஆற்றலும், பொருளாதார சமூக இலட்சியங்களின் நிறைவேற்றமும் பாதிக்கப்படவும் கூடும்.

மூன்றாவதாக மட்டுப்படுத்தப்பட்ட வரி ஆதாரங்களின் அடிப்படையில், நேரடி வரிகளிலிருந்து வரும் அரசிறையில் தொடர்ச்சியான அதிகரிப்பையைப் பெறுவதும் ஓர் முக்கிய பிரச்சனையாக உள்ளது. மேற்கூறிய வரி ஆதார அடிப்படையில் நேரடி வரிகள்மூலம் அரசிறைக்குச் சேரக்கூடிய வருவாய்களின் அதிகரிப்பு காலம் செல்லச் செல்ல சுருங்கிக் கொண்டே போகும். அப்பொழுது, வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய்களை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின், வரி ஆதாரங்களை விரிவாக்குதல் அவசியமாகும். புகுத்தப்பட்ட புதிய வரிகளிற் சில, வரி ஆதாரங்கள் விரிவாக்கப்பட்டமையை ஓரளவு பிரதிபலிக்கின்றன. இவை தேசிய அபிவிருத்தி வரி, நிலவரி, சொந்தத் தொழிலாற்றுவோர் பேரில் உள்ள பதிவு வரி முதலியன ஆகும். இறக்குமதி தீர்வைகள், விற்பனவு வரி போன்ற மறைமுக வரிகளின் வியாபகமும் கூடிய முறையில் பரந்து காணப்படும். பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்கின்ற ஓர் சந்தர்ப்பத்தில், இவ்வளர்ச்சியினால் சமுதாயத்திற்குச் சேருகின்ற வருமானங்களின் அதிகரிப்பில் ஒரு பகுதியை அரசிறைக்குச் சேர்க்கும் வகையாக வரிவிதிப்பு முறை அமைந்திருத்தல் வேண்டும். இத்தகைய வருமான ஏற்றங்கள் பரந்து காணப்பட்டால், மட்டுப்படுத்தப்பட்ட ஆதாரங்களைச் சார்பாக கொண்ட வரிவிதிப்பு முறை போதுமான அளவிற்குப் பயனளிக்கமாட்டாது.

அரசிறை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுடன் அபிவிருத்திக்கான நிதிக்கு ஓராதாரமாக நடைமுறைச் செலவுகளுக்கு மேல் அரசிறை மிகைகளைப் பெறவேண்டுமாயின், நடைமுறைச் செலவுகளின் மட்டத்தில் மாற்றங்கள் செய்யவேண்டும். ஆண்டுதோறும் அரசிறையில் அதிகரிப்பைக் கொண்டு வருவதற்கு ஓர் வரையறை ஏற்படுத்தப்பட்டிருப்பின், நடைமுறைச் செலவீடுகளைக் குறைப்பதன் மூலம் தான் அரசிறை மிகைகளைப் பெறமுடியும். கடந்த சில ஆண்டுகளில் வரிகளில் ஏற்பட்ட அதிகரிப்புகள் மூலம் அரசிறைக்குக் கிடைத்த வரவுகள் பெரும்பாலும் நடைமுறைச் செலவுகளின் உறுதியான அதிகரிப்புக்களுக்காகவே ஈட்டப்பட்டன. இவ்வதிகரிப்புகள் நிருவாகம், சமூகசேவைகள், அபிவிருத்தித் தொழிற்பாடுகள் ஆகியனவற்றில் மாத்

திரமின்றி, நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் அளிக்கப்பட்ட நேரடி உணவு மானியங்களிலும் ஏற்பட்டன. அத்துடன் அரசாங்க முயற்சிகளில் ஏற்பட்ட நட்டங்களினுலும், நடைமுறைச் செலவுகளில் மேற்கூறிய உறுதியான அதிகரிப்பு ஏற்பட்டது. ஏதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளின் நடைமுறைச் செலவுகள் தவிர்க்கமுடியாத முறையில் தொடர்ச்சியாக, அதிகரித்துக்கொண்டே போகும். ஆனல் திடமான ஒரு கொள்கை மூலம் நடைமுறைச் செலவுகளை மட்டுப்படுத்தாவிடில் அல்லது குறைக்காவிடில், அபிவிருத்திக்கு வேண்டிய வளங்களை மிகுதியாக்குவதற்கு வரிவிதிப்புத் துறையில் இலங்கை எடுக்கும் முயற்சிகள் பயனற்றதாகிவிடும். இது முடிவில், பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைத் தடுக்கும் அல்லது வீக்கத்தை கொண்டு வந்து, அதனுல் பொருளாதாரம் முழுவதிலுல் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

(ஆ) வர்த்தக வங்கிக் கொடுகடனின் விரிவுப்பாதிப்பு

இதற்கு முந்தைய பகுதி உள்நாட்டுப்பண நிலைமையில் அரசாங்க நிதியியக்கம் கொண்டு வந்த விரிவுப்பாதிப்பைப் பரிசீலனை செய்தது. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் நிதியீட்டம் கொண்டு வரக்கூடிய விரிவுடன், தனிப்பட்டோர் துறைக்காக வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடனும் நாணய விரிவைக் கொண்டுவர முடியும். 1961க்கு முந்தைய உடனடி ஆண்டுகளில், தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கொடுகடனில் நியாயமான அளவிற்கு அதிகரிப்புக் காணப்பட்டது. எனினும் அரசாங்க வரவு செலவுத்திட்டக் குறைகள் தோற்றுவித்த கொடுகடன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், இந்த அதிகரிப்பின் அளவு சிறிதாக விளங்கியது. வரவு செலவுத்திட்டக்குறைகள் வங்கிகளினது திரவச் சொத்துக்களின் நிலைமையைப் பலமாக்கும் தன்மைவாய்ந்ததாக விளங்கின. ஏனெனின், பிரதிகூலமான வெளிநாட்டு நிலுமை இத்திரவச் சொத்துக்களை மட்டுப்படுத்தும் அளவிற்கும் மேலதாக இவ்வரவுச் செலவுத் திட்டக்குறைகள் விளங்கின. இவ்வாறு கொடுகடன் விரிவுக்கான ஆதாரம் சீர்த்திருத்தப்பட்டது.

வரவு செலவுத் திட்டக்குறைகள் கொண்டுவந்த நாணய விரிவிலும் பார்க்க, வர்த்தக வங்கிகள் தனிப்பட்டோர் துறைக்கு வழங்கிய கொடுகடன் அதிகரிப்பு கொண்டுவந்த நாணய விரிவு சிறிதாக விளங்கியதெனினும், இக்கொடுகடன் அதிகரிப்பு கொண்டு வந்த நாணய விரிவை இயலக்கூடிய வரையில் தடுக்க வேண்டியதாகவே இருந்தது. இறக்குமதிகளின்பேரில் அளவுக் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டபின்னரும், அதனுல் நடைமுறைக் கணக்கின் மேல் உள்ள சென்மதி நிலுவைக்குறை சுருக்கப்பட்ட பின்னரும், 1961ல் மேற்கூறிய தேவை குறிப்பிடத்தக்க ஓர் முக்கியத்துவத்தைப் பெற்றது. தொடர்ச்சியான வரவு செலவுத்திட்ட விரிவு காணப்படுகின்ற ஓர் சூழ்நிலையில், சென்மதிக் குறைவில் ஏற்படும் மேற்கூறிய சுருக்கம், வங்கிகளினது திரவச் சொத்துக்களை மேலும் அதிகரித்து, கொடுகடனை விரிவாக்குவதற்கு வங்கிகளுக்குள்ள சக்தியை மேலும் கூட்டும் தன்மைவாய்ந்தது. ஆயினும் கொடுகடனைப் பொதுவாக மட்டுப்படுத்த வேண்டியிருந்ததாலும், இம்மட்டுப்படுத்தலை முக்கியமாக அத்தியாவசியமற்ற இறக்குமதிகளுக்காகவும், இதர உற்பத்தியற்ற தேவைகளுக்காவும் வழங்கப்படும் கொடுகடன் பேரிலேயே கொண்டுவரல் வேண்டும். இத்தேவைகள், 1961ல் நாணயப்பகுதியில் கையாளப்பட்ட நடவடிக்கைகளையும், கொள்கைகளையும் நிர்ணயித்தன.

வர்த்தக வங்கிகள் வழங்கும் கொடுகடனின் அளவையும் நோக்கத்தையும் நிர்ணயிப்பதற்காகவும், அரசிறைப்பகுதியில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாகவும் 1960ம் ஆண்டு ஆவணியில் மகாவங்கி நாணயத்துறையில் பல நடவடிக்கைகளைப் புகுத்தியது. சிலவகைப் பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதங்களுக்கு எதிராக 50 சதவீத முற்பணத்தை பெறும்படி வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன; கேள்வுக் கொள்வனவு இயக்கங்களுக்குக் கிடைக்கக் கூடிய நிதிகளை மட்டுப்படுத்தும்படியும், குறித்த சில வித பொருட்களை இறக்குமதி செய்வதற்காகவோ அல்லது வாங்குவதற்காகவோ வழங்கப்படும் முற்பணங்களைக் கட்டுப்படுத்தும்படியும் வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. அத்துடன், கொடுகடன் மீது பொதுவான கட்டுப்பாடுகளும் புகுத்தப்பட்டன. முற்பணங்களின் பேரில் முன்னர் 2½ சதவீதமாக விளங்கிய மகாவங்கியின் வட்டிவிகிதம் 4 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆயினும் சில அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதிகளுக்கும், உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி ஆகியனவற்றிற்கும் வழங்கப்படும் முற்பணங்களுக்கு ஓர் விசேட சலுகைவிகிதமான 2½ சதவீத வட்டி அனுமதிக்

கப்பட்டது. மொத்த வைப்புக்களுக்கெதிராக வர்த்தக வங்கிகள் மகாவங்கியில் வைத்திருக்கவேண்டிய ஒதுக்குநிதிகளும் 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டன.

1961ல் மேலும் பல நடவடிக்கைகள் புகுத்தப்பட்டதன் மூலம் வங்கிக் கொடு கடன்மேல் உள்ள கட்டுப்பாடுகள் தீவிரமாக்கப்பட்டன. வர்த்தக வங்கிகளுக்கு மகாவங்கி வழங்கும் முற்பணங்களின் பேரில் அனுமதிக்கப்பட்டதென்று மேலே குறிப்பிடப்பட்ட விசேட சலுகை விகிதமான 2½ சதவீத வட்டிக்கு பதிலாக, 1961 தை மாதத்தில் 4 சதவீத வட்டி கொண்ட ஒரு பொதுவிகிதம் புகுத்தப்பட்டது. ஆயினும் கூட்டுறவுச் சங்கங்களின் சிலவகை வழங்குதவணை வாக்குறுதிப் பத்திரங்களின் அடைமானத்திற் கெதிராக வழங்கப்படும் முற்பணங்களைப் பொறுத்தவரையில் ஒரு விதிவிலக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்த முற்பணங்களுக்கு 3 சதவீத வட்டிவிகிதம் அனுமதிக்கப்பட்டது. வர்த்தக வங்கிகள் வைத்திருக்கவேண்டிய ஒதுக்குநிதிகளின் சட்டபூர்வமான அளவை, 1961 மாசியில் மகாவங்கி மேலும் உயர்த்திற்று. மொத்த வைப்புக்களுக்கு எதிராக வைக்கப்படவேண்டிய ஒதுக்குநிதிப் பொது நிபந்தனையாகிய 12 சதவீதத்துடன் 1962 மாசியில் நிலவிய மட்டங்களுக்கு மேலே ஏற்பட்ட கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பில் 38 சதவீதத்திற்கு நிகரான விசேட ஒதுக்கு நிதிகளை வைத்திருக்க வேண்டுமெனவும் வர்த்தக வங்கிகள் கேட்டுக்கொள்ளப்பட்டன. இது, நிறுவப்பட்ட எல்லைக்கு மேலே ஏற்பட்ட சகல வைப்புக்களுக்கும் 50 சதவீத ஒதுக்குநிதி விகிதத்தை உண்டாக்கியது. ஆயினும், வர்த்தக வங்கிகள் 1961ம் ஆண்டு பங்குனி 15ம் திகதியில் வைத்திருந்த நாணய உடமைகளுக்கு மேலதிகமாக உண்டாகிய நாணய உடமைகளைத் தத்தம் சட்டபூர்வமான ஒதுக்கங்களின் ஒரு பகுதியாக உள்ளடக்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. சட்டபூர்வமான ஒதுக்கங்களின் 50 சதவீதத்திற்கு மேற்படக்கூடியதாக நாணய உடமைகள் இருக்கக் கூடாதென்ற நிபந்தனைக்குட்பட இந்த அனுமதி கொடுக்கப்பட்டது. மேலும் 1961 ஐப்பசி தொடக்கம் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடாத அந்நியத் தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களும் மேலதிகப் பற்றுக்களும், செலாவணிக் கட்டுப்பாட்டால் மூன்றிலொன்றால் குறைக்கப்பட்டன.

இந்நடவடிக்கைகளுக்கமையவே வர்த்தக வங்கிகள் 1961ல் தனிப்பட்டோர் துறைக்கு கடன்களை வழங்கின. ஆயினும் வங்கிகளுக்கும் அவற்றின் ஊழியர்களுக்கும் இடையே எழுந்த பிணக்குக் காரணமாக, 1961 மார்கழி மாதப் புள்ளி விபரங்கள் கிடைக்காமையால், இத்துறையில் இவ்வாண்டு தோன்றிய மாற்றங்களை முற்ருக மதிப்பிடுதல் சாத்தியமாகாது. ஆகவே பின்வருகின்ற மதிப்பீடு, கார்த்திகை முடிவுவரை கிடைத்த தரவுகளின் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வங்கிகள் தனிப்பட்டோர் துறைக்கு 1961ல் வழங்கிய கடன்களின் மாதச் சராசரி அளவில், முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 120 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டது. ஆயினும், கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட அதிகரிப்பின் அளவுடன் ஒப்பிடுகையிலும் சரி, முழுநியதிப்படியாக பார்த்தாலும் சரி, மேற்கூறிய அதிகரிப்பின் அளவு சிறியதாகவே விளங்கிற்று. இது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை I—6**

**தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்கள்**
**(மாதத் தொகைகளின் சராசரி)**

*பத்து இலட்சம் ரூபாய்கள்*

| | 1959 | முந்தைய ஆண்டிற்கு மேல் ஏற்பட்ட அதிகரிப்பு | 1960 | முந்தைய ஆண்டிற்கு மேல் ஏற்பட்ட அதிகரிப்பு | 1961 ✱ | முந்தைய ஆண்டிற்கு மேல் ஏற்பட்ட அதிகரிப்பு |
|---|---|---|---|---|---|---|
| கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள் .. .. | 119 | + 3 | 115 | — 4 | 121 | + 7 |
| கடன்களும், மேலதிகப் பற்றுக்களும் | 395 | +32 | 430 | +35 | 435 | + 5 |
| உள்நாட்டில் தனிப்பட்டோர் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் .. .. | 514 | +35 | 545 | +31 | 557 | +12 |

✱1961, கார்த்திகை வரைக்கும் உள்ள சராசரி

மேலே காட்டப்பட்டபடி, 1961ம் ஆண்டு வர்த்தக வங்கிகளின் கொடுகடனில் ஏற்பட்ட சிறிய அதிகரிப்பின் முக்கிய பகுதி கழிவோடு மாற்றப்பட்ட உண்டியல்கள்—பிரதானமாக ஏற்றுமதி இறக்குமதி உண்டியல்கள்—சம்பந்தமாகவே உண்டாயிற்று. முந்தைய ஆண்டுகளில் காணப்பட்ட அனுபவத்திற்கு இது வேறுபட்டு விளங்குகின்றது. அவ்வாண்டுகளில், கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் அதிகரித்தமையினுலேயே பெரும்பாலும் வங்கிக் கொடுகடன் உயர்ந்தது.

மேலும் வர்த்தக வங்கிகளின் மொத்தத் திரவச் சொத்துக்களின் நிலையில் சீர்திருத்தம் ஏற்பட்ட ஓர் சந்தர்ப்பத்தில், வங்கிக் கொடுகடன் விரிவு மட்டுப்படுத்தப்பட்டது. 1961ல் வங்கிகளின் மொத்தத் திரவச் சொத்துக்களினது மாதச் சராசரி 3750 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. முந்தைய ஆண்டின் மாதச் சராசரியிலும் பார்க்க, இது 420 இலட்சம் ரூபாய்களால் அதிகமாக இருந்தது. மறுபுறத்தில் 1959ம் ஆண்டிலும் 1960ம் ஆண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புகள் முறையே 100 இலட்சம் ரூபாய்களாகவும், 220 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

வரவு செலவுத்திட்டக் குறைகள் தொடர்ச்சியாக ஏற்பட்ட பொழுதிலும், சென்மதி நிலுவையின் பேரில் நிகர வெளியேற்றம் குறைந்து காணப்பட்ட பொழுதிலும், வங்கிகளின் திரவச் சொத்துக்களின் அதிகரிப்பை மட்டுப்படுத்தும் தன்மைக்காக விளங்கிய ஒரு காரணத்தை இங்கே குறிப்பிடவேண்டும். வங்கி வைப்புக்களிலும் பார்க்க, பொதுசனங்கள் நாணய உடமைகளை வைத்திருக்க விரும்பியதே இக்காரணமாகும். இது பின்னர் வரும் வேருெரு பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு போக்கு காணப்பட்டிருக்காவிடின், கடந்த சில ஆண்டுகளில் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மேலும் பெரியதாக இருந்திருக்கக்கூடும்.

மேற்கூறிய குறிப்புகள், தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கொடுகடன் சம்பந்தப்பட்டனவாகும். 1961ம் ஆண்டுக்கு முந்தைய உடனடி ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ஓர் குறிப்பிடத்தக்க அளவைக் கொண்டதாக இருக்கவில்லை. ஆனுல் 1961ம் ஆண்டிலோ, அரசாங்கத்திற்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்களில் 270 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட ஓர் நியாயமான அதிகரிப்பு ஏற்பட்டது. இது பிரதானமாக, வர்த்தக வங்கிகளினது இறைசேரி உண்டியற் கொள்வனவுகள் அதிகரித்தமையினுலேயே உண்டாயிற்று. 1961ல் வர்த்தக வங்கிகளின் இறைசேரி உண்டியல் உடமைகளை 220 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. அரசாங்கத்திற்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்களையும் சேர்த்தால், 1961ம் ஆண்டில் வர்த்தக வங்கிக் கொடுகடனில் ஏற்பட்ட இக்கொடுகடன் அதிகரிப்புகளுடன் ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. ஆயினும், அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன் அரசாங்க நிதியியக்கத்தின் விரிவுப் பாதிப்பில் ஒரு பகுதியாக அமைகின்றது. இது முந்தைய பகுதியில் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளது.

இறக்குமதிச் செலவீடுகளிலும், ஏற்றுமதிப் பெறுமானத்திலும் ஏற்பட்ட வீழ்ச்சி கொடுகடன் வளர்ச்சியைக் குறைக்க உதவி புரிந்திருக்கக்கூடும். எனினும் 1960–61 ஆண்டுகளில் விதிக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகள் தனிப்பட்டோர் துறைக்கு வழங்கப்பட்ட வங்கிகளினது கடன்களின் அதிகரிப்பை மட்டுப்படுத்த ஓரளவுக்கு காரணமாக விளங்கின. உதாரணமாக, சட்டபூர்வமான ஒதுக்கு நிதிகளின் அளவை உயர்த்துவதனுல் ஏற்பட்ட பாதிப்பை பின்வருவது ஓரளவில் விளக்கிக் காட்டுகின்றது. அதாவது மாதச் சராசரிகளின் அடிப்படையில், 1960ம் ஆண்டு 1012 இலட்சம் ரூபாய்களாக விளங்கியதற்கு எதிராக, 1961ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் உண்மையான பண ஒதுக்கங்கள் 1097 இலட்சம் ரூபாய்களாக விளங்க, சட்டபூர்வமான ஒதுக்குநிதிகளின் அளவுக்கு மேலதிகமாக விளங்கிய நிதிகளின் அளவு 129 இலட்சம் ரூபாய்களிலிருந்து 51 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. 1961ம் ஆண்டின் பிற்பகுதியில், அதாவது ஆவணி முடிவிலிருந்து கார்த்திகைக் கடைசிவரை, வர்த்தக வங்கிகளின் மொத்த ஒதுக்கங்கள், சட்டபூர்வமான அளவுக்கு மேலதிகமாக உயரவில்லை. 1961ல் வர்த்தக வங்கிகளினது மேலதிக ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட சுருக்கத்துடன், மகாவங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் பெற்ற கடன்களிலும் ஒரு அதிகரிப்பு காணப்பட்டது. 1961ல் 130 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இத்தகைய கடன்பாடுகளின் மாதச் சராசரி 189 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்ந்தது.

வங்கி வட்டி விகித அதிகரிப்பைத் தொடர்ந்து பொதுமட்டத்தில் 1961ல் ஏற்பட்ட உயர்ச்சியும், வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்களின் போக்கை நிர்ணயிப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கிற்று. உதாரணமாக, 1960 புரட்டாதி 30ம் திகதியில் இருந்த மொத்த வர்த்தக வங்கி முற்பண நிலுவையில் 30 சதவீத நிலுவை 4—5½ சதவீதவட்டி விகிதங்களிலும், 31.8 சதவீத நிலுவை 5½—6 சதவீத வட்டிவிகிதங்களிலும் பெறப்பட்டிருக்க, 1961 புரட்டாதி 30ம் திகதியில் இருந்த மொத்த வர்த்தக வங்கி முற்பண நிலுவையில் 50.8 சதவீதமானவை 5½—6 சதவீத விகிதங்களிலும், 5.1 சதவீதமானவை மட்டும் 4—4½ சதவீத விகிதங்களில் பெறப்பட்டன. 1960, புரட்டாதியில் 5.45 சதவீதமாக விளங்கிய வர்த்தக வங்கி முற்பண வட்டிவிகிதங்களின் சராசரி, 1961 புரட்டாதியில் 6.16 சதவீதத்திற்கு உயர்ந்தது.

நாணயத்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும், தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கடன்களின் நோக்கத்தை நிர்ணயிக்க உதவி புரிந்தன. இத்தகைய வங்கிக்கொடுகடன்களின் மொத்தம் ஓரளவு கணிசமாக உயர்ந்த பொழுதிலும், கேள்வுக்கொள்வனவு இயக்கங்களைப் பெரும்பாலும் கொண்ட நிதித் தேவைகளுக்காகவும், நுகர்ச்சிக்காகவும் வழங்கப்பட்ட முற்பண அளவுகளில் வீழ்ச்சியே ஏற்பட்டது. தற்காலிக எண்தொகைகளுக்கேற்ப, 1960 புரட்டாதிக்கும், 1961 புரட்டாதிக்கும் இடையே நிதித்தேவைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி 132 இலட்சம் ரூபாய்களைக் கொண்டதாகும், மறுபுறத்தில் ஏற்றுமதி, இறக்குமதி நிதியீட்டங்களையும் உள்ளடக்கிய வர்த்தக தேவைகளுக்காகவும், விவசாயம், கைத்தொழில் ஆகியனவற்றிற்காகவும் வழங்கப்பட்ட முற்பணங்கள் ஓரளவு கணிசமாக அதிகரித்தன.

கடந்த சில ஆண்டுகளில் நாணயவிரிவில் வங்கிக்கொடுகடன் வகித்த பங்கு சிறியதாகவே விளங்கியமையால், இந்த நாணயக்கொள்கைப்பகுதியில் எடுக்கக்கூடிய திருத்தச்செயலாற்றம் குறுகியதாகவே உள்ளது. நாணய நிலைமையின் சமமற்ற தன்மைக்கு முக்கிய காரணமாக அரசாங்க நிதியியக்கமே தொடர்ந்து விளங்குகின்றது. இத்துறையில் எடுக்கப்படும் பரிகார நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக மட்டுமே நாணயப்பகுதியில் இயன்றவரை எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் விளங்கமுடியும். அத்துடன் ஏற்றுமதி, உள்நாட்டு உற்பத்தி, மற்றும் இதர அத்தியாவசிய இயக்கங்கள் ஆகியனவற்றிற்காகத் தொடர்ந்து நிதியீட்ட வேண்டி இருப்பதால், வங்கிக் கொடுகடனை மட்டுப் படுத்துவதற்கு அளிக்கப்படும் வாய்ப்பு மேலும் வரையறுக்கப்பட்டுள்ளது. இறுதி விளைவுகளைப் பார்க்கும் பொழுது, கொடுகடனை மிதமிஞ்சி மட்டுப்படுத்த முயற்சித்தால் அது கொடுகடன் மட்டுப்படுத்தலின் நோக்கத்தை அடையாமற் செய்யும்.

(இ) பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு

முன்பிருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில், 1961ம் ஆண்டு இறக்குமதிகளின் தீவிரக் குறைப்பால் இலங்கையினது சென்மதி நிலுவையில் சீர்த்திருத்தம் ஏற்பட்ட பொழுதிலும், பொருளாதாரத்தில் இயங்கிக்கொண்டிருந்த விரிவுச் சக்திகள் கணிசமாகக் குறைக்கப்படவில்லை என்பதை முந்தைய பகுதிகள் எடுத்துக்காட்டியுள்ளன. இனி நாட்டின் பண நிரம்பல் முழுவதிலும், விலை வாசிகளின் பொதுமட்டத்திலும், இச்சக்திகள் கொண்டு வந்த ஒருமித்த விளைவை ஆராய்தல் வேண்டும்.

பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களைப்பற்றிய விரிவான விபரங்கள், 1961 கார்த்திகை முடிவுவரைக்கும் மட்டுமே கிடைத்திருக்கின்றன. பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்களையும், அம்மாற்றங்களுக்குப் பொறுப்பான காரணிகளையும் பின்

வரும் அட்டவணை எடுத்துக்கூறுகின்றது. ஒன்றையொன்று ஒப்பிட்டுப்பார்ப்பதற்காக, 1960 கார்த்திகை மாத முடிவுக்கும், 1961 கார்த்திகை மாத முடிவுக்கும் இடையே உள்ள 12 மாத காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவற்றிற்கு பொறுப்பான காரணிகளையும் இவ்வட்டவணை தருகின்றது.

**அட்டவணை I—7**

பண நிரம்பல் (கால முடிவில்)

இலட்சம் ரூபாய்கள்

| | கார்த்திகை 1960 | கார்த்திகை 1961 |
|---|---|---|
| மொத்தப் பண நிரம்பல் .. .. .. | 12195 | 12511 |
| முந்தைய மாதங்களுக்கு மேலதாக ஏற்பட்ட நிகர மாற்றம் .. .. .. | +500 | +316 |
| **விரிவுக்காரணிகள்** | | |
| (அ) வங்கிகளிடமிருந்து அரசாங்கம் பெற்ற கடன்பாடு .. .. | 2257 | 2190 |
| (ஆ) தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கொடுகடன் | 269 | — |
| (இ) அரசாங்கப் பண மீதங்கள் .. .. | 380 | — |
| (ஈ) ஏனையவை .. .. .. | 16 | 08 |
| **மொத்தம்** .. .. | **2922** | **2198** |
| **சுருக்கக்காரணிகள்** | | |
| (அ) வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் .. | 1603 | 980 |
| (ஆ) தவணை வைப்புக்களிலும், சேமிப்பு வைப்புக்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு .. | 762 | 238 |
| (இ) தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் வழங்கிய கொடுகடன் .. .. | — | 31 |
| (ஈ) அரசாங்கப் பண மீதங்கள் .. .. | — | 460 |
| (உ) ஏனையவை .. .. .. | 56 | 172 |
| **மொத்தம்** .. .. | **2421** | **1881** |

மேற்காட்டப்பட்டுள்ளபடி, 1961ம் ஆண்டிலும் பணநிரம்பல் தொடர்ச்சியாக அதிகரித்தது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, வரவுசெலவுத் திட்டக்குறையின் நிதியீட்டத்திற்காக வங்கிகள் ஆக்கிய கொடுகடனே மேற்கூறிய அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக விளங்கிற்று. அதே நேரத்தில் ஈடுபடுத்தும் பயனைக் கொடுக்கும் நிகர வெளிக்கொடுப்பனவுகள், முந்தைய ஆண்டிற்பார்க்க குறைவாகவே காணப்பட்டது. இது நாட்டின் சென்மதி நிலுவையில் ஏற்பட்ட சீர்த்திருத்தத்தைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதி வருமானங்களில் மந்தம் ஏற்பட்டிருக்காவிடில், பணநிரம்பலின் பேரில் அரசாங்க நிதியியக்கம் கொண்டுவந்த பாதிப்பு இன்னும் பெரிதாகவே இருந்திருக்கும். இறக்குமதிக் குறைப்பு காணப்படுகின்ற நேரத்தில், ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்ட இந்த மந்தமே பிரதிகூலமான சென்மதி நிலுவைக்குப் பிரதான அம்சமாக விளங்கிற்று.

கடந்த சில ஆண்டுகளில் பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்புடன், கேள்வி வைப்புக்களுடன் ஒப்பிடுகையில், நாணயத்தாள், நாணயங்கள் ஆகியனவற்றில் அதிகரிப்பு ஏற்பட்டது. வங்கி வசதிகளைப் பொதுவாக நாடாதார்க்குச் சாதகமாக, பணவருமான உயர்ச்சிகள் பங்கிடப்பட்டதை இது குறிக்கின்றது போலும். அத்துடன் கேள்வி வைப்புக்களிலும் பார்க்க நாணய ரூபத்திலேயே திரவச்சொத்துக்களை வைத்திருக்கும் விருப்பம் அதிகரித்துள்ளதையும் இது குறிக்கக்கூடும்.

மொத்தப்பண நிரம்பலில் நாணயம், நாணயத்தாள் ஆகியனவற்றின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பு 1961ல் தொடர்ந்தது. ஆனல் முந்தைய ஆண்டுகளில் நாணயம் நாணயத்தாள், கேள்விவைப்புக்கள் ஆகிய இரண்டும் அதிகரித்ததிருக்க, 1961ல்

மொத்தக் கேள்விவைப்புக்களில் உண்மையாக ஓர் வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது, பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு நாணயம் நாணயத்தாள் ஆகியனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பையே முற்ருகக் கொண்டிருந்தது. மேற்கூறிய காரணங்களுடன், ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட மந்தமும் இந்த விளைவுக்கு உதவியிருக்கக் கூடும்.

பண நிரம்பலிலும், அதன் கூறுகளிலும் 1961ம் ஆண்டு ஏற்பட்ட மாற்றங்கள் பின்வரும் அட்டவணையில் சுருக்கப்பட்டுள்ளன.

அட்டவணை I—8

பணநிரம்பல்

இலட்சம் ரூபாய்கள்

| | மார்கழி 1960 | மார்கழி 1961 | மாற்றம் |
|---|---|---|---|
| மொத்தப் பண நிரம்பல் .. .. | 1,2089 | 1,2511 | + 422 |
| சுற்ருேட்டத்திலுள்ள நாணயம், நாணயத் தாள் கேள்விவைப்பு .. .. | 5953 | 6651 | + 698 |
| கேள்விவைப்பு .. .. | 6136 | 5861 | — 275 |
| பண நிரம்பலின் சதவீதமாக நாணயம், நாணயத்தாள் .. .. | 492 | 532 | |

கேள்விவைப்புக்களுக்கு நாணயம், நாணயத்தாள்கள் ஆகியனவற்றின் விகித அளவில் ஏற்பட்ட விரிவுப்போக்கு, இலங்கையில் வங்கித்தொழில் அபிவிருத்திக்கு உகந்ததல்ல என்பது கவனிக்கப்படல் வேண்டும். கேள்விவைப்புக்களில் ஏற்படும் அதிகரிப்பு வங்கிகளின் சாதனங்களைப் பெருக்கி, அவைகளுக்குள்ள கொடுகடன் ஆக்கத் திறனை பலமாக்குமெனினும், இவற்றில் பெரும்பகுதி பெரும்பாலும் நாணய அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்கடங்கியதாகவே விளங்குகின்றது. மறுபுறத்தில், வங்கியில் கணக்கு வைக்கும் பழக்கம் குறைந்தால், அது பயன்படத்தக்க நாணய கொள்கைக்கான வாய்ப்பைக் குறைத்து விடும். சுற்ருேட்டத்திலுள்ள நாணயம் நாணயத்தாள்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஓர் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில் ரூ. 50, ரூ. 100 ஆகிய உயர்ந்த இனத்தாள்களில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பாகும். பெரும் கொடுக்கல் வாங்கல்களுக்காக நாணயம் நாணயத்தாள்கள் கூடிய முறையில் உபயோகிக்கப்பட்டதென்பதையும், நாணய ரூபத்தில் திரவச்சொத்துக்களை வைத்திருப்பதில் உள்ள விருப்பத்தையும், இது குறிக்கின்றது என்பதற்கு இடம் உண்டு.

(ஈ) விலைவாசிகளின் போக்கு

முந்தைய ஆண்டுகளின் நாணய விரிவின் பயனுல் நுகர்ச்சிப்பொருட்களின் கேள்விகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் கூடுதலான அளவில் இறக்குமதிகளை வருவிப்பதின் மூலம் ஈடுசெய்யப்பட்டது. இலங்கையின் அந்நிய ஒதுக்குநிதிகளைக் குறைப்பதன் மூலமாக இவ்விதம் இறக்குமதி செய்தல் சாத்தியமாயிற்று. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அதிகரித்த நிரம்பல், நாணய விரிவின் பயனுய் ஏற்படும் அமுக்கங்களிலிருந்து இலங்கையின் பொதுவான விலைமட்டங்களைப் பாதுகாக்க பெரும் அளவில் உதவியது. 1961ம் ஆண்டில் இறக்குமதி அளவுகள் தீட்சணமாகக் குறைந்தமையைத் தொடர்ந்து மேற்கூறிய நிலை மிகவும் வேறுபாடடைந்தது. நாணயத் துறையில் விரிவுக் காரணிகள் தொடர்ந்தும் இருக்கின்ற ஒரு சந்தர்ப்பத்தில், பொருட்களின் நிரம்பலும் குறையுமேயானுல், விலைமட்டங்களின் மேலும், செலவுகளின் மேலும் கூடுதலான அமுக்கங்கள் தோன்றுதல் இயல்பு.

எனினும், 1961ம் ஆண்டில் நாணய விரிவின் பயனுல் விலைமட்டங்களின் மேல் ஏற்படத்தக்க பலாபலன்களைத் தடுக்கும் தன்மையுடைய மூன்று காரணிகள் காணப் பட்டன. அவையாவன:— (1) முந்தைய ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கையிருப்புகள் நியாயமான அளவில் இருந்தமை. (2) உள்நாட்டிற் தயாரிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தி அதிகரித்தமை. (3) ஏற்றுமதி விலைவாசி களில் ஏற்பட்ட மந்தத்தைத் தொடர்ந்து ஏற்றுமதித் துறையின் வருமானங்களின் வீழ்ச்சி விநியோகிக்கப்பட்ட முறை ஆகும்.

இறக்குமதிப் பொருட்களின் கையிருப்புகளில் வருடா வருடம் ஏற்பட்ட மாற் றம் சம்பந்தமாகத் திட்டவட்டமான புள்ளிவிபரங்கள் இல்லை. ஆயினும், 1959ம், 1960ம் ஆண்டுகளில் ஏற்பட்ட உயர்ந்த மட்ட இறக்குமதிகளில் ஒரு பகுதி, இறக்கு மதிக் கட்டுப்பாடுகளை முன்கூடியே உணர்ந்து கையிருப்புகளை உயர்த்திக்கொள்வதற் காக இறக்குமதி செய்யப்பட்டிருக்கக்கூடும், என்பதைப் பிரதிபலிக்கின்றது. உதார ணமாக இறக்குமதி செய்யப்பட்ட சில முக்கியமான தொகுதிகளைச் சேர்ந்த நுகர்ச் சிப்பொருட்களின் கையிருப்புகள் 1960ம் ஆண்டு பங்குனி மாதத்திற்கும் ஆனி மாதத் திற்கும் இடையில் குறிப்பிடும்படியாக அதிகரித்துள்ளன என்பதை, இறக்குமதிக ளின் கையிருப்புகள் சம்பந்தமாக இலங்கை மகாவங்கியினுல் நடாத்தப்பட்ட அரை குறையான அளவீட்டிலிருந்து கிடைத்த தற்காலிகமான புள்ளிவிபரங்கள் காட்டு கின்றன. 1960ம் ஆண்டு ஆவணியில் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் நடை முறைக்கு வருவதற்குமுன் இறக்குமதியாளர்கள் உத்தரவிட்ட பொருட்கள் தொடர்ந்தும் வந்திறங்கிக்கொண்டிருந்தமையால், 1960ம் ஆண்டின் பிற்பகுதியில் கையிருப்புகள் மேலும் அதிகரித்துள்ளன எனத் தெரிகிறது, இவ்விதமான கையிருப் புக்கள் இருந்தமையால், 1961ம் ஆண்டு முழுவதும் இறக்குமதிகள் குறைக்கப்பட்ட மையால் ஏற்படத்தக்க தட்டுப்பாடுகள் ஓரளவு ஈடுசெய்யப்பட்டிருக்கக்கூடும்.

இதேபோல, நுகர்ச்சிப் பொருட்களின் அதிகரித்த உள்நாட்டு உற்பத்தி, நாணய விரிவின் பயனுல் விலைவாசிகளின்மேல் தோன்றும் பலனை ஈடுசெய்யத்தக்கது. தேசிய வருமானப்புள்ளிபரங்களின்படி, 1961ம் ஆண்டில் நுகர்ச்சிப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி, உண்மை நியதியின்படி 2½ சத வீதத்தால் உயர்ந்துள்ளது. இவ்வுயர்ச்சி 1960ம் ஆண்டுக்குரிய உயர்ச்சியிலும் பார்க்க ஓரளவு குறைவானதாயி னும், இது விலைமட்டங்களை ஓரளவு பாதுகாத்தது. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்த தைத் துணையாகக்கொண்டு நிலையான விலைமட்டங்களோடு இசைந்த ஓரளவான நாணயவிரிவைச் செய்து கொள்வது முறையானதாகும்.

ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட மந்தமான தன்மையின் விளைவுகள் நாணயவிரி வின் பிரமாண்டத்திலும் தோன்றின. எனினும் விலைவாசிகள் சம்பந்தமாக ஏற்று மதி வருமான வீழ்ச்சியில் வேறொரு அம்சமும் உளது. இவ்வருமான வீழ்ச்சி 1961ம் ஆண்டில் தெங்கு, இரப்பர் ஆகிய துறைகளிலேயே செறிந்து காணப்பட்டது. எனவே அவ்வீழ்ச்சி பெருந்தொகையான சிறு உற்பத்தியாளரைத் தாக்கியது. இவ் வீழ்ச்சியின் பயனுக நுகர்ச்சிப் பொருட்களின் கேள்வியிலும் தோன்றும் பலாபலன் கள், இதே அளவான வருமானவீழ்ச்சி ஒரு சிறிய தொகையான பெரும் உற்பத்தி யாளரிடையே செறிந்து காணப்பட்டால் (உதாரணமாக தேயிலைத் தொழிலில்) ஏற்படும் பலனிலும் பார்க்கக் கூடியதாக உள்ளது.

பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பில் எவ்வளவு பகுதி மேலதிகமான நாணய வடிவத்தில் ஆக்கப்பட்ட திரவச் சேமிப்புக்களைக் குறிக்கின்றது என்பதை அளவிடு தல் இயலாது. எனினும் அவ்விதம் நிகழ்ந்தது என்பதை முன்னர் கூறியவாறு பொதுமக்களின் கையில் உள்ள உயர்ந்த இன நாணயத்தாள்களில் ஏற்பட்ட அதிக

ரிப்பு தெரிவிக்கின்றது. 1961ம் ஆண்டின் தேசிய வருமானத்தில் பணநிரம்பலின் பங்கு, குறிப்பாக நாணயங்களின் பங்கு, ஒரு பொது அளவாக அதிகரித்துள்ளது. எனவே பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பில் ஒரு பகுதியை நாணயச் சுற்றோட்டத்துரிதத்தில் ஏற்பட்ட ஒரு சிறிய வீழ்ச்சி ஓரளவு ஈடுசெய்திருக்கக்கூடும் என்பது புலனுகிறது. எனினும் சேமிப்புக்கள் மிகத்திரவமான வடிவத்தில் இருக்கின்றன என்பது, அச்சேமிப்புக்கள் தற்காலிகமானவை என்பதையும், அந்த நாணய உடைமைகள் வருங்கால நுகர்ச்சிச் செலவிற்கு மூலங்களாக விளங்கத்தக்கன என்பதையும் அறிவுறுத்துகின்றது.

சில்லறை விலைவாசிகள், மொத்த விலைவாசிகள் ஆகியவற்றின் குறிகாட்டிகள் இல்லாத பட்சத்தில், மேற்கூறிய காரணிகளின் பயனுக 1961ம் ஆண்டு விலைவாசிகளில் ஏற்பட்ட இறுதியான பலாபலன்களை அளவிடுதல் இயலாது. விலைவாசிகளில் ஏற்பட்ட பொதுவான மாற்றங்களை அளவிடுவதற்கு கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி போதாது. ஏனெனில் இக்குறிகாட்டியில் சேர்க்கப்பட்டிருக்கும் விடயங்கள், கொழும்பில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தின் நுகர்ச்சி அமைப்பில் உட்படும் விடயங்களை மட்டும் கொண்டுள்ளன. அன்றியும், இவ்விடயங்களில் அநேகமானவை இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு உட்படாதனவாக இருப்பதோடு, மான்யம் அளிக்கப்படும் பொருட்கள் தொழிலாளர் வர்க்கத்தின் செலவீட்டில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றனவையாக உள்ளன. கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி அளிக்கும் சில சான்றுகள் பின்வரும் முடிவையே காட்டுகின்றன. அதாவது 1961ல் விலைவாசிகள் பொது அளவாக உயர்ந்ததெனினும், 1961ல் இறக்குமதிகளின் தீட்சணமான குறைப்பு, குறிகாட்டியிலிருந்த விடயங்களை பதித்திருந்தால் அல்லது கிடைக்கக்கூடிய நிரம்பல்களில் உண்மையான குறைப்பைக் கொண்டுவந்திருந்தால் ஏற்பட்டிருக்கக்கூடிய விலைவாசி உயர்ச்சியின் அளவிலும் பார்க்க, இந்த விலைவாசி உயர்ச்சியின் அளவு தாழ்வாகவே விளங்கிற்று.

1961ம் ஆண்டில் சகல விடயங்களுக்குமான கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி முந்தைய ஆண்டிலிருந்து 1.3 சதவீதத்தால் சிறிது உயர்ந்தது. அதே காலத்தில், குறிகாட்டியில் உள்ள உள்நாட்டு உற்பத்தி விடயங்கள் 3.1 சதவீதத்தால் சற்று விரைவாக அதிகரிக்க, இறக்குமதித்தொகுதி விடயங்கள் 1 சதவீதத்தால் உயர்ந்தன. குறிகாட்டியில் உள்ள ஏற்றுமதித் தொகுதி உற்பத்திகளின்—பிரதானமாக தேங்காய்களின்—விலைவாசிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால், பொதுக்குறிகாட்டியில் உண்டான உயர்ச்சி சற்றுத் தளர்த்தப்பட்டது. 1961ல் ஏற்றுமதித் தொகுதியின் குறிகாட்டி 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பொதுக்குறிகாட்டியில் இத்தொகுதி கொண்டு வரக்கூடிய மாற்றங்கள் சிறியதாகவே உள்ளன. ஏனெனில் பொதுக்குறிகாட்டியில் இத்தொகுதிக்குள்ள முக்கியத்துவம் 5 சதவீதம் மட்டுமே. பொதுக்குறிகாட்டியில் வரும் தனிப்பட்ட பண்டத்தொகுதிகளின் விலைவாசிகள் வித்தியாசமான விகித மாற்றங்களைக் காட்டின. இவ்வாறு, 1961ல் உடை, எரிபொருட்களும் விளக்கும், ஏனைய பண்டங்கள் ஆகியவற்றிற்கான குறிகாட்டிகள்முறையே 9.3 சதவீதத்தாலும், 1.7 சதவீதத்தாலும், 4.5 சதவீதத்தாலும் உயர்ந்தன. ''சகல உணவு'' விடயங்களுக்கான குறிகாட்டி 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஆனுல் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உணவு விலைகள் 5.6 சதவீதத்தால் உயர்ந்தன.

கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டியில் காட்டப்பட்டபடியுள்ள விலை அதிகரிப்புகள், விலைவாசிகளின் பொதுமட்டத்தில் ஏற்பட்ட உயர்ச்சியைக் குறைத்துக் காட்டுகின்றதென்று கருத இடம் உண்டு. சிலவகை நுகர்ச்சிப் பொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்திருக்கக்கூடும்; என்றுலும் இறக்குமதிகளின் அளவில் ஏற்பட்ட கணிசமான குறைப்பின் பயனுக ஒரு தீவிர அதிகரிப்பு விலைவாசி

களின் பொது மட்டத்தில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இது முற்கூறப்பட்ட மட்டுப்படுத்தற்காரணிகள், 1961ல் கணிசமான அளவில் இயங்கிக்கொண்டிருந்தன என்பதைக் குறிப்பாக அறிவிக்கின்றது.

ஆயினும், இக்காரணிகள் ஒன்றிலிருந்து தொடர்பான நிவாரணத்தை எப்பொழுதும் பெறுதல் முடியாது என்பதை உணர்தல் முக்கியமாகும். இறக்குமதிகள் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்டும், நாணயக் கேள்வி ஒருயர்ந்த மட்டத்தையடைந்தும் இருக்கும் ஓர் சந்தர்ப்பத்தில், தற்போதுள்ள இறக்குமதிப் பொருட்களின் கையிருப்புக்கள் ஒழிந்துவிடும் தன்மை வாய்ந்தன. இதனால் விளையும் தட்டுப்பாடுகள், விலைவாசிகளைத் தவிர்க்கமுடியாத முறையில் உயரச்செய்துவிடும். இறக்குமதிகளின் பேரில் உள்ள கட்டுப்பாடுகள் அத்தியாவசியமான பொருட்களில் பெரும்பாலானவற்றைப் பாதிக்காவிடினும், அவைகளால் பாதிக்கப்பட்ட இதர விடயங்கள் மிகவும் பரந்தவை ஆகும். ஆகவே இப்பகுதியில் உண்டாகும் விலைவாசி உயர்ச்சி பரந்து காணப்பட்டு, விலைகள், செலவுகள் ஆகியவற்றின் மட்டங்கள் முழுவதையும் பாதிக்கும் போலத் தோன்றுகின்றது.

விலைவாசி, செலவுகளில் ஏற்படும் மிதமிஞ்சிய அதிகரிப்பு, பொருளாதாரம் முழுவதிலும் அபாயமான விளைவுகளை உண்டாக்கும். ஒரு புறத்தில் இது பாரதூரமான சமூக விளைவுகளை உண்டாக்கி, பிரதிகூலமான முறையில் வருமானப்பங்கீட்டு மாற்றத்தைக் கொண்டுவரக்கூடும். மறுபுறத்தில், விலைவாசிகளின் உயர்ச்சிப்போக்கு தொடர்ச்சியான பலாபலன்களையே உண்டாக்கும். விலைவாசிகள் உயர்ந்துக் கொண்டே சென்றால் அது சம்பள ஏற்றக்கோரிக்கைகளுக்கு வழிகாட்டும். இக்கோரிக்கைகள் வழங்கப்பட்டால் அது விலைகள், செலவுகள் ஆகிய மட்டங்களை மேலும் உயர்த்திவிடும். இலங்கை இருக்கின்ற நிலையில், பொருளாதாரத்தில் ஏற்றுமதிகள் வகிக்கும் பங்கு மிக முக்கியமாக விளங்குகின்றமையால், இத்தகைய ஒரு போக்கு குறிப்பான தீங்கை விளைவிக்கும். உள்நாட்டுச் செலவுகளில் ஏற்படும் அதிகரிப்புகளுக்கு இணக்கம் அளிக்கும்படியாக ஏற்றுமதிகளுக்கான வெளிநாட்டு விலைகளை உயர்த்த முடியாது. ஆகவே ஏற்றுமதித்துறையின் போட்டிநிலை தளர்வதுடன் செலவுகளில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு, உற்பத்தியில் படிப்படியான குறைப்பை விளைவிக்கக்கூடும். இது சென்மதி நிலுவையின் நிலைமையையும், வரவு செலவுத்திட்டநிலையையும் மேலும் சீர்கேடாக்கி, இறக்குமதிகளை மேலும் குறைக்க வேண்டிய தேவையையும், விரிவைக் கொண்டு வரும் நிதியை நாடவேண்டிய தேவையையும் உண்டாக்கும். இவ்வாறு, தொடர்ச்சியான நாணயவீக்கப் போக்கு ஒன்று தோற்றமளிக்கும்.

மேற்காட்டப்பட்ட ஒரு நிலைமையைத் தவிர்த்தல் இலங்கைக்கு மிக முக்கியமானதொன்றாகும். இறக்குமதிகள் தொடர்ச்சியாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில், நாணய விரிவைத் குறைத்தலும், உள்நாட்டு உற்பத்தியை எவ்வளவு விரைவாக அதிகரிக்க இயலுமோ அவ்வளவு விரைவாக அதிகரித்தலுமே அடிப்படையான தேவைகளாகும். இக்குறிக்கோள்களை நிறைவேற்ற எடுக்கவேண்டிய முயற்சிகள் பெரும்பாலும் அரசாங்க நிதியியக்கம், அபிவிருத்திக்கொள்கை ஆகிய பகுதிகளையே சார்ந்தனவாகும்.

(உ) கட்டுப்பாட்டுக் கருவிகள்

இறக்குமதிகளின் பேரில் உள்ள கட்டுப்பாடுகளின் தொடர்ச்சி பற்றிய ஒரு அம்சம் இங்கே குறிப்பிடவேண்டியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களின் நிறைவேற்றம் தீவிரமாகின்ற பொழுதும் மூலதனப்பொருட்கள், மூலப்பொருட்கள் ஆகியனவற்றினது இறக்குமதிகளின் தேவை கூடுகின்றபொழுதும், இலங்கையின் சென்மதி நிலுவை பாதிக்கப்படும். ஆகவே, எதிர்காலத்திலும் அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை மட்டுப்படுத்துகின்ற ஒரு கொள்கை வேண்டியதாக இருக்கும். எனவே இக்காரணத்திற்காக கட்டுப்பாட்டுக் கருவிகளைக் கவனமாகத் தெரிந்தெடுத்தல் முக்கியமாகும்.

இறக்குமதிகளின் துரிதமான குறைப்பைக் கொண்டு வருவதற்கு, உத்தரவுச் சீட்டு, அனுமதிப்பங்கு ஆகியனவற்றை வழங்கும் முறை மூலம் இறக்குமதிகளை மட்டுப்படுத்துவது பயன்படத்தக்க வழியாகும். இறக்குமதிக் குறைப்பை உடனடியாகக்

கொண்டுவர வேண்டுமாயின், உத்தரவுச்சீட்டு, அனுமதிப்பங்கு ஆகியனவற்றைப் பாவித்தல் தவிர்க்க முடியாததாகும். ஆயினும் நீண்ட காலக்கொள்கை என்ற முறையில் பார்த்தால், இக்கருவிகள் சில வரையறைகளுக்குட்பட்டதே. முதலாவதாக, அளவுக்கட்டுப்பாடுகளை மட்டும் தனியாகப் பாவித்தால், அது பொருளாதாரத்தில் இறுக்கங்களைப் புகுத்திவிடும். மட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயங்களை நிர்ணயித்தலும், அத்தியாவசியமானவை எவை, அத்தியாவசியமற்றவை எவை எனப் பாகுப்படுத்தலும் ஓரளவுக்கு தன்னிச்சையான அடிப்படையில் செய்யப்படுகின்றன. இதன் விளைவாகப் பலவிதமான தட்டுப்பாடுகள் தோன்றி பொருளாதார இயக்கத்தை சீர்கெடச் செய்யவும் கூடும். பலவித இறக்குமதிகளில் தங்கியிருக்கும் ஒரு நாட்டில் இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக விளங்கக்கூடும்.

இரண்டாவதாக, அளவை மட்டுப்படுத்துகின்றபொழுது விளையும் தட்டுப்பாடு விலைவாசிகளை உயர்த்தும் தன்மைவாய்ந்தது. ஆயினும், விலைவாசிகளின் உயர்ச்சியில் ஏற்படும் நன்மைகள் இறக்குமதியாளர்களையும், விநியோகம் செய்வோரையுமே சென்றடையும். இது கூடுதலான வருமானங்களை உண்டாக்கி, பொருளாதாரத்தில் காணப்படும் விரிவு அமுக்கங்களை மேலும் மிகுதியாக்கும். விலைக்கட்டுப்பாட்டைப் புகுத்துவதன் மூலம் விலைவாசிகளில் ஏற்படும் அதிகரிப்பை ஓரளவுக்கு மட்டுப்படுத்த முடியும். ஆனால், விலைக்கட்டுப்பாடுகளைச் செயற்படுத்தல் மிகவும் கடினமானது ஆகும். அநேகமானோர் இக்கட்டுப்பாடுகளுக்குட்படாது நழுவிச்செல்வர். நுகர்வோருக்குக் கிடைக்கக்கூடிய பொருட்களின் நிரம்பலில் இக்கட்டுப்பாடுகள் மேலும் சுருக்கத்தை கொண்டுவரும்.

இவ்விரு காரணங்களுக்ககாக, விலை அமைப்பு முறையால் இறக்குமதிகளைத் தொடர்ந்து மட்டுப்படுத்தும் கொள்கைக்கு வாய்ப்புள்ளது. கடந்த ஆண்டு அறிக்கையில் ஆராயப்பட்டுள்ளபடி, இறக்குமதிகளின் பேரில் பயன்படத்தக்க வகையில் தீர்வைகளை விதித்தால், அது இறக்குமதிகளின் அளவைக் குறைப்பதற்கும் உதவும். அத்துடன் அளவு மட்டுப்படுத்தல்களைப் போலல்லாது, வித்தியாசம் வித்தியாசமான தேவைகளுக்கேற்ப இணங்கும்வகையில் பொருட்களின் நிரம்பல்களை நிலைநாட்டுவதற்கு இவை உதவிபுரிகின்றன. நிரம்பல்களின் சுருக்கத்தைத் தொடர்ந்து ஏற்படும் விலையதிகரிப்பின் விளைவாகத் தனிப்பட்ட வியாபாரிகள் பெறக்கூடிய மிதமான இலாபங்களில் ஒரு பகுதியை அரசிறைக்கு சேர்க்க இயன்றனவாகவும் இவ்விறக்குமதித் தீர்வைகள் விளங்குகின்றன. இக்கூடுதலான வருமானங்கள் வரவு செலவுத்திட்டக்குறையைக் குறைக்கும் பட்சத்தில், இத்தீர்வைகள் நாணயச் சுருக்கத்தை விளைவிக்கும். பொருளாதாரம் அபிவிருத்தியடைகின்றபொழுது, நுகர்வோரின் கொள்வனவு வலு அநேகமாக விரிவடைகின்றது. இவ்விரிவில் ஒரு பகுதியை அரசிறைக்குச் சேர்ப்பதற்கு ஒரு வசதியான கருவியாக சிலவகைப் பொருட்களின் மேல் விதிக்கப்படும் உயர்ந்த இறக்குமதித் தீர்வைகள் விளங்குகின்றன.

கட்டுப்பாடுக் கருவிகளில் எதைக் கையாளவேண்டும் என்ற கேள்வி, எதிர்காலக் கைத்தொழில் அபிவிருத்திக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. பின்னொரு பிரிவில் விவரித்துள்ளபடி, சென்மதி நிலுவையின் சீர்த்திருத்தத்திற்காகப் புகுத்தப்பட்ட அளவுக்கட்டுப்பாடுகள், இறக்குமதிப்பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டில் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களின் நிறுவனத்திற்குச் சந்தேகமற ஊக்கமளித்துள்ளன. இது 1961ம் ஆண்டின் பொருளாதார அமைப்பில் காணப்படும் அம்சங்களில் ஒன்றாக விளங்குகின்றது. எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு, இந்த அம்சம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஆனால் இங்கேயும், நீண்டகால நோக்கு முக்கியமானது. இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்குப் பாதுகாப்பு வேண்டுமாயினும், அவ்வாறு நிறுவப்படும் கைத்தொழில்கள், கைத்தொழிற் துறையிலுள்ள வளங்களைச் சிக்கனமான முறையில் பாவிக்கின்றனவா என்பதும் முக்கியமானது. இதனால், அளவுகளை மட்டுப்படுத்தல் மேற்கூறிய பாதுகாப்புக்கு ஒரு சக்திவாய்ந்த கருவியாக விளங்கிய பொழுதிலும், இது இறக்குமதித் தீர்வையிலும் பார்க்கக் குறைந்த பயனைக் கொடுக்கும் கருவியாகவே விளங்கக்கூடும். எதிர்கால வளர்ச்சிப்போக்கு ஓர் பலமுள்ள, திறன்வாய்ந்த கைத்தொழில் அமைப்பை உண்டாக்கவேண்டியது மிகவும் விரும்பத்தக்கதாகும். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு கட்டுப்பாட்டுக் கருவிகளின் தெரிவு மிக முக்கியம் வாய்ந்ததாகும்.